


# The Bible Standard

(தமிழ் வெளியீடு)

“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 868**

**பொருளடக்கம்**


பேலிக்ஸ்க்கு முன்பாக அப்போஸ்தலர் பவுல் ............... 2

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.................. 7

நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே ................ 11

பொருளாதாரம், சபை மார்க்கம் மற்றும் சமுதாயம் அசைக்கப்படுதல் ........... 14



**BS Tamil Version - 15**

# ஃபேலிக்ஸ்க்கு முன்பாக அப்போஸ்தலர் பவுல்

**அப்போஸ்தலர் 24**

**"நான் பொல்லாப்புக்குப் பயப்படேன்: ஏனெனில் தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்" சங். 23 : 4.**

ஓர் கைதியாக பவுல் செசரியாவிற்கு வந்து சேர்ந்த ஐந்து நாட்களுக்கு பின்பு, சனகரிப் சங்கத்தின் மூப்பர்களோடு பிரதான ஆசாரியனாகிய அனனியாவும், அவனுடன் பேசுவதற்கென்று அழைக்கப்பட்ட நியாயசாதுரியனும் பட்டணத்திற்கு வந்து பவுலுக்கு விரோதமாக குற்றங்களைச் சுமத்தினார்கள். உடனடியாக விசாரணை ஆரம்பமானது. நியாயசாதுரியனாகிய தெர்த்துல்லு, கவர்னரிடம் முகஸ்துதி யாக மிகவும் மாய்மாலமான முறையில் தன்னுடைய வாதத்தைத் தொடங்கினான். இச்சம் பவத்தை வரலாறுகளிலிருந்தும்கூட நாம் அறியலாம். "யூதேயாவிற்கு ரோமர்களால் அனுப்பப்பட்டவர்களுள் இவன் மிகவும் நேர்மையற்றவனும் மோசமான அதிகாரியு மானவன்" என இரண்டு சரித்திர ஆசிரியர் களான ஜோசபஸ் மற்றும் டாசிடஸ் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள்."




2012—க்கான சட்ட வாக்கியம்
"தேவரீர் என்னோடேகூட இருக்கிறபடியால் நான் பொல்லாப்புக்குப் பயப்படேன்" – சங். 23 : 4

இவ்வகையான முகஸ்துதியானது, தகுதியில்லாத புகழ்ச்சியும், முற்றிலும் போலியான ஒரு நடிப்புமாகும். ஆண்ட வரை பின்பற்றுகிறவர்கள் சம்பந்தப்பட்ட உபதேசங்களுக்கு இவைகள் முற்றிலும் முரண்பாடானவைகள். இது நேர்மை யற்றதும் மாய்மாலமானதுமாகும். எனினும், இந்த முகஸ்துதியானது ஒரு வலிமையான ஆயுதமாகும். உலக காரியங்களில் அவர்கள் எண்ணியதுபோன்று அவர்களுக்கு அது அனுகூலமாக இருக்கிறது. இத்தகைய போலியான நடிப்புகளிலிருந்து விலகியிருக்கிற ஆண்டவருடைய விசுவாசிகளுக்கு, அதாவது தங்களுடைய செயல்களிலும் வார்த்தைகளிலும் நேர்மையையும் சத்தியத்தையும் கடைபிடிக்க வேண்டு மென்று எண்ணங்கொண்டிருக்கிற அவருடைய விசுவாசி களுக்கு விரோதமாக இந்த நேர்மையற்றவர்கள் இதனை பயன்படுத்துகின்றனர். மற்றும் சில தேவனுடைய ஜனங்கள் இத்தகைய காரியங்களில் நேர்மையை இறுதிவரை கடைபிடிக்கிறார்கள். பவுலின் நிலையிலிருக்கிற அநேகர் பேலிக்ஸை கடிந்து கொள்ளும்படியான தங்களுடைய நிலையை உணர்ந்திருப்பார்கள். ஆனால், தெருக்களில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு தவறு செய்பவர்களையும் கடிந்து கொள்ள வேண்டும் என்பது அதிக கடமையில்லை. ஆனால் இத்தகைய காரியங்களில் குறைபாடு உள்ள ஆனால் கற்றுக்கொள்ளும் குணமுள்ளவர்களுக்கு தேவனுடைய ஜனங்கள் அறிவுரை கூறலாம். இந்த விஷயத்தில் அப்போஸ்தலரின் போக்கானது ஓர் தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றிருப்பதற்கான ஓர் நல்ல உதாரணமாகும். கவர்னருடன் உரையாட தனக்கு வாய்ப்பு வந்தபோது, அவர் அவரைக் கடிந்து கொள்ளவோ அல்லது குறைகளைச் சுட்டிக்காட்டவோ அல்லது முகஸ்துதியான வார்த்தைகளையோ கூறவில்லை. அவ ருடைய மறுபேச்சின் முன்னுரையின் ஒவ்வொரு வார்த்தையையும் முழுமையான அர்த்தத்தோடு, வெளிப்படுத்தியதோடு, அவை நாகரீகமான முறையிலும் பண் பான முறையிலும் ஏற்றுக் கொள்ளும் விதமாகவும் அவர் பேசினார்.

நன்நடத்தை என்பது எப்பொழுதுமே ஓர் கிறிஸ்தவ குணாம்சமாகும். உலகத்தில் இது ஒருவேளை முக்கியத்துவம் வாய்ந்ததாக யில்லாமல் இருக்கலாம் அல்லது நாசுக் கானதாகவும் இருக்கலாம். ஆனால், ஒரு கிறிஸ்தவனிடம் அது வெறுமனே வெளிப்புற தோற்றமுடையதாக இருந்துவிடக் கூடாது, மாறாக, அவை இருதயத்தின் உண்மை யான உணர்வைக் குறிக்கிறதாகவும் ஜீவியத்தின் முக்கியத் துவம் வாய்ந்த அன்பின் வரிசையில் விருத்தியடைந்திருக்க வேண்டும். அன்பானது நற்குணம், பொறுமை, இரக்கம் போன்றவற்றிற்கு வழிநடத்தும். எனினும், கீழ்ப்படியாமை என்னும் விஷயத்திலும்கூட ஒரு அன்பற்ற வார்த்தையை கூற தயங்கி தேவையான காலம்வரை தடுக்கும்.

நியாயசாதுரியனாகிய தெர்த்துல்லு, பவுல் அப்போஸ்தலருக்கு விரோதமாக கடுமையான குற்றச் சாட்டுகளைச் சுமத்தினான். ரோம அரசாங்கத்திற்கு எதிராக, சட்டத்திற்கு மாறான செயலை பவுல் செய்ததாக பேலிக்ஸ் முன்பாக தெரியப்படுத்தினான். அதாவது ஜனங்களிடையே பவுல் கலகத்தைத் தூண்டியதாக குற்றம் சாட்டினான். இந்தக் குற்றசாட்டானது மேலும் விரிவாக்கப்பட்டு, தற்போதைய


**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

வழக்காக எருசலேமின் கலகத்திற்காக மட்டுமல்லாமல், பவுல் ரோம் பிராந்தியங்களில் எங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் ஜனங்களிடையே கிளர்ச்சி நடந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. இந்த நியாயசாதுரியனுக்கு இந்த கலகமானது சத்தியத்தின் மற்றும் நீதியின் வளர்ச்சியை தடைசெய்யும் விதமான தீயவர்களுடைய முயற்சி என தோன்றவில்லை. பேலிக்ஸ்க்கு முன்பாக அந்த வழக்கறிஞன் காட்ட முயற்சித்தது என்னவெனில், பவுலின் மனுவை ஏற்காமல், இப்படிப்பட்ட கலகத்திற்கு ஏதுவானவர்கள் யாராயிருந்தாலும் இந்த நல்ல அரசாங்கத்திற்கும், சட்ட ஒழுங்கிற்கும் ஓர் எதிரியாக கருதப்பட வேண்டும் என்பதே.

உண்மையான சுதந்திரம் மற்றும் சுதந்திரத்தின் கோட்பாடுகளை மதித்துணராதவர்களுக்கு இத்தகைய விவாதங்கள் இன்றைய காலத்திலும் மிகவும் சக்தி வாய்ந்ததாகவே இருக்கிறது. இது நமக்கு ஆச்சரியமல்ல, ஏனெனில், "**நிகழ்கால சத்தியத்தின்**" எதிரிகள் அப்போஸ்தலனுடைய அடிச்சுவடுகளில் நடக்க விரும்புகிறவர்களாகிய நமக்கு விரோதமாக இதுபோன்ற அநீதியான நிலையை எடுத்து நிற்பார்களேயானால் அது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடாது. அறிகுறியான பாபிலோனில் இருக்கும் நமது சகோதரர்களுக்கு புதிய யுகத்தின் சத்தியங்களை அறிவிக்க நாடும்பொழுது, அவர்களும் அதனைக் கேட்க விரும்புகிறதில்லை; எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை மற்றவர்களும் பெறாதபடிக்கு தடையும் செய்கிறார்கள். (லூக். 2 : 10). அதுமட்டுமல்ல அவர்கள் மிகுந்த கோபமடைந்து தூஷித்து துன்புறுத்தவும் செய்கிறார்கள்.

## அப்போஸ்தலரின் எதிர்வாதம்

குற்றங்கள் சுமத்தப்பட்ட பின்பு, பவுல் தனக்காக பேசும்படியாக அனுமதியளிக்கப்பட்டார். அதன்பின்பு நல்ல விளைவை ஏற்படுத்த பவுல் எதிர்வாதம் செய்தார். (1) தான் எருசலேமிற்குள் கொஞ்ச காலத்திற்கு முன்புதான் வந்து சேர்ந்ததாகவும், தான் எந்தவிதமான கலகத்தையோ அல்லது கிளர்ச்சியையோ உண்டாக்கவில்லை எனவும், மாறாக, தான் அமைதியாக தேவாலயத்தில் தேவனை தொழுது கொள்ளும்பொழுது தான் கைது செய்யப்பட்டதாகவும், தான் ஒருவனிடத்திலும் சண்டையிடவோ அல்லது ஒருவருடைய உரிமைகளை குறித்தும் தான் தர்க்கம் பண்ணவோ இல்லை என்றார். (2) தன் மீது குற்றம் சாட்டுகிறவர்கள் அவை உண்மைதானா என்பதற்கான ஆதாரங்களைக் காட்டும்படியாகக் கோரினார். அவர்களால் அது முடியாது என அவர்களுடைய இயலாமையை சுட்டிக்காட்டி மிகவும் நியாயமான, சட்டரீதியாலும் தம்மீது குற்றம் சாட்டியவர்களுக்கு இதனை நிரூபிக்கும்படியான நிர்பந்தம் இருக்கிறதெனவும், அது தனக்கு இல்லை எனவும் காண்பித்தார். (3) அவர் ஒன்றை மாத்திரம் ஒத்துக் கொண்டார். அது என்னவெனில், தனக்கு விரோதமாக இவர்கள் கடுமையான வெறுப்பு கொள்வதற்கு ஒரு காரணம் இருப்பதாகவும், அது யூத மதத்திலிருந்து பிரிந்துதான் மாறுப்பட்ட உபதேசத்தை நம்புவதாகவும், தன் உடன் யூதர்கள் தன் மீது குற்றம் சாட்டுவதாக கூறினார். நசரேயருடைய மத பேதத்திற்கு முதலாளியாக இருக்கிறான் என்ற குற்றசாட்டிற்கு அவர் இந்த பதிலை அளித்தார். அது யூத மதத்திற்கு எதிரான சமயபேதம் என்பதையோ யூத மதத்திலிருந்து பிரிந்து போன ஒரு தனி பிரிவு அல்லது அது ஒரு மாறுபட்டது என்பதையோ அவர் மறுத்தார். கிறிஸ்தவ மார்க்கமானது வேறுபட்டது என்றும் யூத மார்க்கத்திலிருந்து பிரிந்துபோன சமயபேதம் என்றும் அப்போஸ்தலனுடைய எதிரிகள் அழைத்தனர். ஆனால், அவர்களுடைய குற்றசாட்டுகள் யாவும் தவறானது என்பது அப்போஸ்தலனுடைய நிலைப்பாடாயிருந்தது. கிறிஸ்தவமானது யூத மார்க்கத்திலிருந்து பிரிந்து வந்தது என்றில்லாமல், ஆனால் அதற்கு மாறாக, அதிலிருந்து இயற்கையாகவே வெளிவந்து சரியான வளர்ச்சியடைந்த ஒன்று எனவும், யூத மார்க்கத்தின் நம்பிக்கையிலும் பலன்களிலும் கட்டப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதல்கள் ஆகும். இந்த காரியத்தை குறித்து அப்போஸ்தலன் ரோமருக்கு எழுதிய தமது நிரூபத்தில் (11-ம் அதிகாரம்) தெளிவாக விளக்கியுள்ளார். அங்கே அவர் யூத தேசத்தை ஒலிவ மரம் என அவர் சித்தரிக்கிறார். அந்த ஒலிவ மரத்தின் வேரானது ஆபிரகாமின் வாக்குத்தத்தம் எனவும், இஸ்ரவேல் ஜனங்கள் அதன் கிளைகள் எனவும் காண்பிக்கிறார். இங்கே அவர், கிறிஸ்தவ மார்க்கமானது வேறொரு மரம் என்றோ அல்லது ஆதியான இந்த ஒலிவ மரத்திலிருந்து புதிதாக முளைத்த தளிர் என்றோ குறிப்பிடவில்லை. மாறாக, இந்த மரமானது முழுமையாக வளர்ச்சியடைந்த நிலையே கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறிக்கிறதாகக் கூறுகிறார். கிறிஸ்துவிடம் முன்னேறவும் அவரை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கிற யூதர்களை வெட்டப்பட்ட கிளைகள் என அழைக்கிறார். உண்மையுள்ளவர்களாக நிலைத்திருந்த அநேக யூதர்கள் உத்தம இஸ்ரவேலர்களாக, பெந்தேகொஸ்தே நாள்முதல் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு கிறிஸ்தவர்களாக ஆவிக்குரிய இஸ்ரவேலர்கள் என்றழைக்கப்பட்டார்கள்.

மேலும், சற்றே முன்னேறி "**நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டென்று**" அவர்களில் சிலர் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்று கூறி அதுவே, அதாவது மரித்தோர் உயிர்தெழுதலைக் குறித்த அவரது விசுவாசத்தையே அவருடைய தேசத்தார் கடுமையாக எதிர்க்கின்றனர் என்று ஆலோசனை சங்கத்தார் முன்பாக தம் தரப்பு நியாயத்தை எடுத்துக் கூறினார்.

நம்முடைய நாட்களின் பொதுவான நம்பிக்கைக்கு அநேக காரியங்களில் முற்றிலும் வித்தியாசமான ஓர் சுவிசேஷத்தை அப்போஸ்தலன் பிரசங்கித்தார் என்பது வெளிப்படையாயிருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்ற கோட்பாட்டை முக்கிய அம்சமாக இதில் அவர் அறிவித்தார். இன்றைய காலத்தில் உயிர்த்தெழுதலை மறுக்கக் கூடிய சதுசேயர்கள் சிலர் மாத்திரமே இருக்கின்றனர். ஆகையால் மரித்தோர் உயிர்த்தெழுதல் என்ற போதனையை முக்கிய அம்சமான போதனையாக்குவது

அவசியமில்லாதது என சிலர் சொல்லலாம். ஆனால் ஒரு சிலரே மனிதர்கள் மரித்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை விசுவாசிக்கிறார்கள் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். பெரும்பாலான மனுக்குலத்தார், அதாவது கிறிஸ்தவர்களும் புறஜாதிகளும், இதுவரை ஒருவரும் மரிக்கவில்லை; மரித்தவர்களாக காணப்படுகிறவர்கள் முன்பைவிட மேலும் அதிகமாக உயிரோடிருக்கிறார்கள் என்ற கோட்பாட்டைக் கடைபிடிக்கிறார்கள். ஒருவரும் மரிக்கவில்லை என நம்புகிறதினால், மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டென்று விசுவாசிப்பதற்கு அவர்களுக்குக் கூடாத காரியமாயிருக்கிறது. மேலும், மற்றொரு கருத்தும் நிலவி வருகிறது. அது சரீர உயிர்த்தெழுதல் என்பதாகும். அதன் கருத்து என்னவென்றால், ஒரு நபரோ அல்லது ஆத்துமாவோ மரிப்பதில்லை எனவும், சரீரத்தை ஒரு வஸ்திரத்தைக் களைவது போல் களைந்து பின்னர் பிற்காலத்தில் அதனை மறுபடியும் பெற்றுக் கொள்வார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் ஒருவேளை மரித்தோர் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலன் இதைத்தான் கூறியிருந்தாரானால், அல்லது "**சரீர உயிர்த்தெழுதல்**" என்று கூறியிருப்பாரானால் அது அவருடைய வாதத்தையே பலவீனமாக்கியிருக்கும். இத்தகைய காரியத்தை குறித்து வாதிப்பதினால் எந்தவொரு குறிப்பிட்ட நன்மையும், இல்லாததால் அது நிரூபிக்கப்பட்டாலும் அதில் நேரத்தையும், ஆற்றலையும் செலவழிப்பது முட்டாள்தனமானதாகும்.

ஆனால் அப்போஸ்தலர் முற்றிலுமாக வேறே கருத்தை உடையவராயிருந்தார். பாவத்தின் உண்மையான சம்பளம் மரணமென்றும், மரித்தோரின் உயிர்த்தெழுதலைத் தவிர மரித்தோருக்கு ஜீவியமோ அல்லது நினைவாற்றலோ கிடையாதென்றும், மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்ட அனைவரும் தெய்வீக கிருபையினால் ஓர் மீட்பு நிறைவேறும் போது மரித்தோரின் உயிர்த்தெழுதல் நிகழும் என்பதே பவுல் அப்போஸ்தலருடைய பிரசங்கத்தின் நோக்கமாயிருந்தது. மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்த அவருடைய பிரசங்கமானது, கிறிஸ்து இயேசு இன்னும் மரித்த நிலைமையில் இல்லை. அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்ற தன்னுடைய விசுவாசத்தை அறிவித்ததோடுமட்டுமல்லாமல், குறித்த காலத்தில் தேவன் உலகத்தாருக்கும் உயிர்த்தெழுதலை அளிப்பார் என்ற அவருடைய விசுவாசத்தையும் வெளிப்படுத்துகிறது. அப்போஸ்தலனுடைய நிலைப்பாட்டிலும் சரி, நம்முடைய நிலைப்பாட்டிலும் சரி, சுவிசேஷ நம்பிக்கையானது இயேசுவிலும் உயிர்த்தெழுதலிலும் மையங்கொண்டிருக்கிறது. (மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்ற கட்டுரையை இலவசமாக பெற எங்களுக்கு எழுதவும்).

## நீதிமான்களும் அநீதிமான்களும் உயிர்த்தெழுவார்கள்

உயிர்த்தெழுதல் [கிரேக்கம் - அனஸ்தசிஸ் (anastasis)] என்பது மரண நிலையிலிருந்து முற்றிலுமான, பூரணமான ஜீவிய நிலைமைக்கு மரண நிலைமையில் இருந்து எழுப்பப்படுதல் என்றால், "**நீதிமான்களும் அநீதிமான்களும்**" உயிர்த்தெழுவார்கள் (வச.15) என அப்போஸ்தலன் கூறியிருப்பது எப்படி? என்ற கேள்வி சிலருக்கு எழலாம்.


குமாரனை உடையவனே ஜீவனை பெறுவான் என்றும், குமாரனை அறிக்கையிடாதவன் பூரண ஜீவனை அதின் பூரணமடைந்த நிலையில் பெறமாட்டான் என்றும், அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவான் (அப். 3 : 23) என்றும் அநேக வேத வாக்கியங்கள் கூறுகின்றன. நீதிமான்களாக்கப்பட்டவர்கள் மட்டுமே பூரண ஜீவனை அடைவார்கள் என இவ்வசனங்கள் கூறியிருக்க, மேலே சொன்ன வசனத்தை இவ்வசனங்களோடு இசைவிணக்கமாக இருக்கும்படி எப்படி புரிந்து கொள்வது?

அப்போஸ்தலன் பிற்காலத்தின் காரியங்களை குறித்து நீதிமான்களும் அநீதிமான்களும் முழு பரிபூரண ஜீவனை அடைவார்கள் என தமது வாதத்தில் கொண்டு வரவில்லை. மாறாக, அவர் தற்காலத்து நீதிமான்கள் மற்றும் அநீதிமான்களையே இங்கு குறிப்பிடுகிறார். தற்காலத்து நீதிமான்கள் "**விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களாவர்.**" இவர்கள் அழைப்பின் சட்டதிட்டங்களுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்தால் ஜீவனுக்குரிய உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள். (யோவா. 5 : 28, 29). தற்காலத்தில் நீதிமான்களாக்கப்படாதவர்கள் யாவரும் அநீதிமான்கள் ஆவர். அவர்கள் விசுவாசிப்பதில்லை; ஏனெனில் இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய கண்களைக் குருடாக்கியிருக்கிறான் என அப்போஸ்தலன் விளக்குகிறார் (2 கொரி. 4 : 4). எனினும், வரயிருக்கிற புதிய யுகத்தின் விசேஷ வேலையாக அனைத்து குருடான கண்கள் யாவும் பார்வையடையும் எனவும், செவிடான அனைத்து காதுகளும் திறக்கும் எனவும், பூமியானது கர்த்தரை அறிகிற அறிவினால் முழுவதும் நிறைந்திருக்கும் எனவும் வேத வாக்கியங்கள் தெளிவாக காட்டுகின்றன. இவை அனைத்தும் இப்பொழுது நீதிமான்களாக்கப்படாத அநீதிமான்களுக்காக, இவர்களும் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாயிருக்கும்படியும், அனைவருக்காகவும் நியமிக்கப்பட்டிருக்கிற உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள். அதின் கிருபையான சிலாக்கியங்களை தனிப்பட்ட முறையில் உதறிவிட்டவர்களைத் தவிர அனைவரும் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள்.

பிற்கால ஜீவியமானது உயிர்த்தெழுதலினால் உண்டானது என தன்னுடைய நம்பிக்கையை காண்பித்த பின், பிற்கால ஜீவியத்தின் நம்பிக்கையின் பிரகாரமாகவே தனது தற்கால ஜீவியத்தை குற்றமற்றமனசாட்சியோடு, தனது சிந்தனைகளையும், வார்த்தைகளையும், செயல்களையும் கட்டுப்படுத்தி, தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக நடக்க பிரயாசப்படுகிறேன் என அப்போஸ்தலன் அறிவிக்கிறார். (வச. 16).

பேலிக்ஸ் மூர்க்க குணமுள்ளவனாயிருந்தாலும் கூட, ஓர் குற்றமற்ற கைதியை மரணத்திற்குட்படுத்தாமல்

தனது மனதை திருப்பினானா அல்லது புகழ்கிற நியாய சாதுரியனை திருப்தி செய்யும்படியாகவும், செல்வாக்கு நிறைந்த பிரதான ஆசாரியர்களுக்கு இசைவாகவோ, அல்லது யாருக்கு சாதகமாக இருந்திருக்கலாம் என நாம் ஆச்சரியப்படலாம். பவுலுக்கு நியாயம் செய்யும் பொருட்டு பரிதானம் வாங்குவதற்கு நல்ல தருணத்தை தேடினான் என புரிந்துகொள்ள கூடுதலான ஆதாரங்கள் நம்மை வழிநடத்துகின்றன. ஏனெனில், நாம் வாசிக்கையில், தான் தனது உடன் சிருஷ்டிகளை தீங்கு செய்வதற்கு நாடவில்லை என்றும் வெளிநாட்டு பட்டணங்களிலிருந்து நிறைய அளவு பணத்தை கொண்டு வந்ததாகவும் தனது உரையாடலில் அப்போஸ்தலன் கூறியிருக்கிறார். இதனால், இந்த கைதியாகிய பவுல் நல்ல கல்வியையும், திறமையையும், ரோமானிய குடியுரிமையையும், எருசலேமில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும், நண்பர்களையும் உடையவராக இருக்கிறார் என பேலிக்ஸ் உணர்ந்து கொண்டான். அதனால் சந்தேகமில்லாமல் அவர்கள் அப்போஸ்தலனுடைய விடுதலைக்காக கைநிறைய வெகுமதிகளை கொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள் என எண்ணியிருந்தான். இதைக் குறித்து வச. 26-ல் சொல்லப்பட்டிருக்கிறது.



ஃபேலிக்ஸ் மற்றும் அவரது மனைவியுடன் பவுல் சம்பாஷனை


## பவுலுடைய பிரசங்கத்தினால் பேலிக்ஸ் பயமடைதல்

வெளிப்படையாக, பேலிக்ஸிக்கு, இந்த கைதியாகிய பவுலைக் குறித்து சிறிதளவு ஆர்வமிருந்தபடியினால், அவரைக் குறித்து யூதஸ்திரியான தன்னுடைய மனைவியிடம் குறிப்பிட்டான். இந்த புதிய போதனையைக் குறித்து மேலும் அறிந்து கொள்வதற்கு பவுலை அவர்களுக்கு முன்பாக அழைப்பித்தார்கள். தேவனுடைய ஏற்பாட்டை குறித்தும், நியாயபிரமாணத்தின் நீதியைக் குறித்தும், விழுந்துபோன மனுஷனால் அதின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரியத்தையும், நியாயப் பிரமாணத்தினால் தண்டனைக்குள்ளாக்கப்பட்டவர்களுக்காக இயேசு மீட்பராக வந்ததையும், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து, பாவத்தை வெறுத்து, மீட்பரின் மேல் விசுவாசமாய் பற்றிகொள்கிற யாவருக்கும் இப்போது இரட்சிப்பும், நித்திய ஜீவனும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று அப்போஸ்தலன் காண்பிக்கையில், அவர்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே திருப்தியடைந்தனர். நீதியானது தெய்வீக பிரமாணத்தின் நியாயமான தேவையென்றும், கிறிஸ்துவில் தேவனுடைய கிருபையை அங்கீகரிப்பதினால் தன்னடக்கத்திற்கும் சுபாவ மனோபாவங்களை எதிர்பதற்கும் வழிநடத்தும் என்றும், நியாயத்தீர்ப்பு நாள் என்ற ஒன்று வரவிருக்கிறதென்றும், நீதியிலிருந்து தவறுகிற அனைவருக்கும் அவர்கள் அடைந்திருந்த அறிவிற்கேற்ற விகிதமாக தண்டனை அடிகள் வழங்கப்படும் என அப்போஸ்தலன் மேலும் கூறினார். இதைக் கேட்டவுடன் கவர்னர் பயமடைந்தான். தனது சொந்த துன்மார்க்க ஜீவியமும், இச்சையான நடக்கையும் அவனது மனக்கண்களுக்கு முன்பாக நின்றதால், அப்போஸ்தலன் காட்டிய தரத்தின் பிரகாரமாக, தான் அநேக அடிகளை பிற்காலங்களில் வாங்க வேண்டியதாகும் என உணர்ந்து கொண்டான். பேலிக்ஸுன் மனைவியாகிய துருசில்லா உண்மையில் அசியஸ் என்ற வேறொரு இராஜாவின் (King Azizus) மனைவியாவாள். அதனால் அவளுடைய மனசாட்சி வெளிப்படையாக அவனைவிடவும் மிகவும் வாடியது. அதனால் மிகவும் சஞ்சலப்பட்டாள். இந்த சுவிசேஷத்தை மேலும் அறிந்து கொள்வதற்கு தனக்கு சமயம் வரும்போது அழைப்பதாக பேலிக்ஸ் கூறினான். ஆனால் மேற்கொண்டு விளக்கங்களுக்காக கூப்பிட்டானா என்பது சந்தேகமே. அவனுக்கு கீழ்ப்படிவதற்கு விருப்பம் இருந்தது. அவனது நடத்தையும் அதனையே பிரதிபலிக்கிறது. தங்களுடைய பாவங்களை எண்ணி பயந்து கொண்டிருக்கிற அநேகர் இந்த பாவங்களைத் தகர்த்தெறிவதற்கு அனுகூலமான ஏதோ ஒரு சமயம் வரும் என எண்ணி எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் பாவத்தை நீக்குவதற்கான அனுகூலமான சமயம் வரப்போவதில்லை. ஆண்டவராகிய இயேசுவின் சீஷனாக மாற விருப்பமுள்ளவன் தைரியமாக கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் தெய்வீக வல்லமையானது பாவத்திற்கான அவனுடைய அடிமைத்தனத்தின் விலங்குகளை உடைத்தெறியும். அவன், முதலாவதாக கிறிஸ்துவால் கிடைக்கும் சுதந்திரத்தை நேசிக்க வேண்டும். ஏனெனில் கிறிஸ்து மட்டுமே நம்மை விடுதலையாக்க முடியும். இந்த ஆவல் இல்லாதவர்கள் மகிமையான ஆயிர வருஷ காலை வருமளவும் பாவத்தின் அடிமைகளாகவே நிலைத்திருப்பார்கள். கிறிஸ்துவை தங்கள் தலையாக கொண்டு ஜெயம் பெற்றவர்கள், அனைத்து சிறைப்பட்டுபோனவர்களையும் விடுதலையாக்கி, பாவக்கட்டுகளை உடைத்து, தேவனுடைய ராஜ்யத்தின் சட்டதிட்டங்களுக்கு அனைவரையும் கீழ்ப்படியும்படி கட்டளையிட்டு, ஆதாமில் இழந்தவற்றிற்காக இயேசுவின் விலையேறப்பட்ட இரத்தத்தினால் மீட்கப்பட்ட அனைவருக்கும் இழந்து போனதைத் திரும்ப கொடுத்து, அவர்களுடைய திரும்புதலுக்காக, அவர்களுடைய தற்கால துணிகரமான பாவத்திற்காக அதற்குரிய விகிதப்படி தண்டனை அடிகளைக் கொடுப்பார்கள். (அப். 3 : 21).

ஃபேலிக்ஸுக்கு சத்தியத்தை அளிப்பதில் அப்போஸ்தலர் கையாளும் முறையிலிருந்து நாம் நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்ளலாம். அவர் கவர்னருடைய குணத்தை எதிர்க்கவோ அல்லது அவனுடைய பாவத்திற்காக திட்டவோ கண்டிக்கவோ இல்லை. அவர் இதற்கு மேலானதையே செய்தார். அந்த நபரை குற்றப்படுத்தாமல், அன்பின் பூரண பிரமாணத்தையும் சுயாதீனத்தையும் நீதியையும் கொண்ட கண்ணாடியை கவர்னருக்கு முன்பாக உயர்த்தினார்.

தேவனால் அங்கீகரிக்கபடகூடிய அந்த பூரண தரத்திற்கு எவ்வளவு குறைவாக தான் இருக்கிறேன் என்பதை அவன் பார்க்கும்படியாக அவனுக்கு உதவினார். சத்திய வெளிச்சத் தையும் அதின் காரியங்களையும் தங்கள் சொந்த நடத்தையில் பிரகாசிக்கும்படியாக விட்டுவிட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் பாவத்தை வெறுக்கக் கற்றுக் கொள்வார்களா. தங்கள் வார்த்தைகளிலும், குறைவில்லாத தங்கள் நடத்தைகளிலும் தேவனுடைய கிருபையின் நிரூபங்களாகவும் அவருடைய கிருபையான ஒழுங்குகளாக வும் இருத்தல் வேண்டும். இவ்விரண்டையும் அவரைத் தேடுகிறவர்களுக்கு வெகுமதியாக அளிக்கிறார். மேலும் சிட்சையையும் திருத்துதலையும் யாருக்கு தேவைப் படுகிறதோ அவர்களுக்கு அளிக்கிறார்!

தன்னுடைய சொந்த வழக்கை குறித்து தனக்கு தீர்ப்பளிப்பவரிடம் அப்போஸ்தலன் மிக தைரியமாக சத்தியத்தை உயர்த்தி உறுதி யாய்ப் பிடித்திருந்தது என்பது விசேஷ மானதும் பாராட்டத்தக்கதுமாக இருக் கிறது. இது சங். 23 : 4-ல் சொல்லப்பட் டவைகளுக்கு முழு இசைவாக இருக்கிறது. தனது ஜீவியத்தின் அனைத்து காரியங் களிலும், ஆண்டவருடைய பக்கத்தில் நிற்கிறவர்களும், மற்றும், ஆண்டவரை தங்களுடைய பக்கத்தில் வைத்திருப் பவர்களும் எந்த பொல்லாப்பிற்கும் பயப்படத் தேவையில்லை. எவ்வாறாக இருப்பினும் இந்த பயமில்லாத தன்மையானது அப் போஸ்தலனிடம் இருந்த அளவிற்கு அதிக மாக நம்மில் இருக்கக் கூடாது, ஏனெனில் அது அசட்டு தைரியத்தையும், மரியாதையற்ற அநாகரிகமான விதத்தில் பேசுவதற்கும் வழிநடத்தும். அன்புடன் சத்தியத்தை நாம் பேச வேண்டும் என்பதே தெய்வீகக்கட்டளை என அப்போஸ் தலன் விவரிக்கிறார். (எபே. 4 : 15).



ஜான் புன்யன்

அப்போஸ்தலனுடைய அனுபவங்கள் நமக்கு மற்றுமொரு பாடத்தையும் கற்றுத்தருகிறது. அப்போஸ் தலன் மட்டுமல்லாது, ஆண்டவருடைய அனைத்து விசேஷித்த பிள்ளைகளும், அதாவது எஜமான் தொடங்கி, அனைவரும் தூஷணத்தினாலும், அவதூறுகளினாலும் தாக்குதலுக்கு உள்ளானார்கள். ஆகவே நம்முடைய இரட்சிப்பின் அதிபதியை நோக்கிப்பாருங்கள். அவருக்கு விரோதமாக அனைத்து விதமான தீங்குகளும் சொல்லப் பட்டன; அனைத்து விதமான தீங்குகளும் செய்யப்பட்டன. அவரை வரம்புகள் மீறி பிசாசுகளின் தலைவன் என்று அழைத்தனர்; தேவதூஷணம் சொன்னார் என சிலுவை யிலும் அவரை அறைந்தனர். மகா எதிராளியானவன் ஏமாற்றப்பட்ட கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் மூலமாக செய்யும் தாக்குதல்கள், நமது ஆண்டவருடைய குணாம் சத்தையும், நடத்தையையும் மிகவும் பளிங்கிற்கு ஒப்பாகவும் பிரகாசமாகவும் ஆக்க உதவியது. அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவங்களும் இது சம்பந்தமாகவே இருந்தன. அவைகள் யாவும் அவருடைய குணாம்சத்தை மிக நேர்த்தியாக ஜொலிக்கப் பண்ணுகின்றன. ஜான் புன்யன் எழுதிய "யாத்திரீகனின் பயணம்" என்ற புத்தகத்திலிருந்து ஒரு பகுதி, நம்முடைய பாடபகுதியின் சாராம்சத்தை சித்தரிக்கிறது. அது நம்மை, தற்காலத்து அவதூறுகளையும் புறங்கூறுதல்களையும் உதறித்தள்ளும்படி உற்சாக மூட்டுகிறது. இவ்விதமாகவே, தெய்வீக கிருபையும், ஆசீர்வாதமும் நம்மோடும் ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்படியாக நாம் எடுக்கும் முயற்சிகளோடும் இருப்பதை நாம் தொடர்ந்து உணர முடிகிறது. ஜான் புன்யனின் எழுத்துக்களிலிருந்து ஒரு சுருக்கமான சிறு பகுதி பின்வருமாறு:

*"பின்னர், மேய்ப்பர்கள் இந்த யாத்திரீகர்களை வேறொரு மலையாகிய கபடமில்லாமை (Mount innocence) என்ற மலைக்கு அழைத்து சென்றனர். அங்கே அவர்கள் முழுவதும் வெண்வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு மனுஷனைக் கண்டார்கள். அங்கே வெறுப்பு மற்றும் பகை என்ற இரண்டு மனுஷர்கள் அவன் மீது அழுக்குக் குப்பைகளை தொடர்ந்து வீசிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் இதோ அதனைக் கவனித்துப் பார்த்தால், அவன் மீது அவர்கள் வீசின அசுத்தங்கள் யாவும் சிறிது நேரத்தில் கீழே விழுந்து போயின. அவனுடைய வஸ்திரம் பார்ப்பதற்கு மிகவும் சுத்தமானதாக எந்தவொரு அழுக்கும் இருந்தது போன்ற தடையமேயில்லாததாகக் காணப்பட்டது. உடனே, இந்த யாத்திரீகர்கள் 'இது எதைக் குறிக்கிறது' என்று கேட்டார்கள். அதற்கு மேய்ப்பர்கள் இவ்விதமாக பதிலளித்தனர்: 'இந்த மனுஷன் தேவனுடைய மனுஷன் ஆவான். இந்த வஸ்திரம் அவனுடைய ஜீவியத்தின் கபடமில்லாமையை குறிக்கிறது. இப்பொழுது அவன் மீது அழுக்கை எறிகிறவர்கள் அவனுடைய நற்செயலை பகைக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் பார்க்கிறதுபோல, அழுக்கானது அவன் வஸ்திரங்களில் ஒட்டிகொள்ளவில்லை. ஏனெனில் அவன் உலகத்தில் கபடமில்லாதவனாய் வாழ்ந்தான். இத்தகைய மனுஷர்கள் மீது அழுக்கை அடிக்கிறவர்களுடைய வேலைகள் யாவும் விருதாவாகும். தேவனுக்கு இதைச் சரிபடுத்த கொஞ்ச நேரமே செலவாகிறது. அதன் விளைவாக அவர்களுடைய கபடமில்லாமையானது வெளிச்சத்தைப் போல பிரகாசமாகவும், அவர்களுடைய நீதியானது நன்பகல் வரைக்கும் பிரகாசிக்கிற வெளிச்சமாகவும் இருக்கும்" என்று அந்த மேய்ப்பர்கள் பதிலளித்தார்கள்.*

***

**<u>ஒசூர் கன்வென்ஷன்</u>**

**கர்த்தருக்கு சித்தமானால் 2012 ஆம் ஆண்டின் தமிழ் நாட்டிற்கான LHMM கன்வென்ஷன் மே மாதம் 5 மற்றும் 6 தேதிகளில் ஒசூரில் நடைபெற இருக்கிறது. இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். சங். 133.**

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

*The Second coming of Christ*


ஆதாமின் சந்ததி முழுவதும் பாவத்தின் தண்டனைக்காக தற்போதைய நிலவரப்படி ஒரு நாளைக்குச் சராசரியாக 1,54,889 பேர் என்ற விகிதத்தில் மகா சிறைச்சாலையாகிய மரணத்திற்குள் சென்றுகொண்டிருக்கின்றனர். ஆனால் ஏற்ற காலத்தில் தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார். அந்தக் குமாரன் மனிதனுடைய பாவங்களுக்காகத் தன்னையே ஓர் பலியாகக் கொடுத்தார். இந்த மீட்பர் பிரேதக் குழியிலிருக்கிற அனை வரையும் வெளியே அழைக்கும் விடுதலையாளராவார். (யோவா. 5 : 28, 29). கல்வாரியில் இயேசுவின் மரணத்திற்கும், "**உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக**" என்று நாம் கற்பிக்கப்பட்டிருக்கிற ஆயிர வருட ராஜ்யத்தின் மூலம் பொதுவான உலகை ஆசீர்வதிக்கிற காலத்திற்கும் இடைப்பட்டக் காலத்தில் ஒரு விசேஷித்த வேலை நடை பெற்றிருக்கிறது என்று நாம் அறிகிறோம். அந்த இடைப்பட்ட காலக்கட்டத்தில் தண்டனைக்குட்பட்ட சந்ததியிலிருந்து விசேஷித்த ஆர்வமும், கீழ்ப்படிதலும், விசுவாசத்தின் மூலமும், தெய்வீகப் பராமரிப்பின் கீழ் கீழ்ப்படிதல் மூலமும், கிறிஸ்துவுக்கு ஒத்த குணசாயலை அபிவிருத்தி செய்து, தங்களுடைய மீட்பருடன் அவருடைய ராஜ்யத்தில் உயர்த்தப்படுகிற ஓர் விசேஷ வகுப்பாராகிய ஒரு "**சிறுமந்தையை**" தேவன் தெரிந்தெடுத்துக் கொண்டிருந்தார். கடந்த யுகத்தின்போது அவருடன் விசுவாசத்தோடு பாடனுபவித்தால், ஆயிர வருட இராஜ்யத்தின்போது உலகை ஆசீர்வதிப்பதற்காக விரைவில் ஏற்படுத்தப்பட இருக்கிற அவருடைய மகா ராஜ்யத்தில் அவருடன் உடன் சுதந்திரர்களாக உயர்த்தப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தை இவர்கள் பெற்றிருந்தார்கள். **(லூக். 12 : 32).**

வேத வாக்கியங்களில் முழுவதுமாக, கிறிஸ்துவின் ராஜ்யமானது உலகத்தின் நம்பிக்கையாகவும் அது உயர்த்தப்படுதலுக்கும், ஆசீர்வாதத்திற்கும் ஏதுவானதாயிருக்குமென்று சீராகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுவிசேஷம் இப்பொழுது பிரசங்கிப்படுவதால் உலகமானது மனந்திரும்புதலின் மூலமாக தேவனுடைய ராஜ்யமானது ஸ்தாபிதமாகும் என்று வேதாகமம் காண்பிக்கவில்லை. ஆனால் மாறாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் ஓர் மானிடனாக அல்லாமல், மறுபடியும் பலியாகும் விதமாய் வராமல், ஓர் ஆவி ஜீவியாக, பாவத்தையும், சாத்தானையும் அழிக்கும்படியாகவும், ஆதாமின் ஒவ்வொரு குமாரனுக்கும், குமாரத்திக்கும் தற்கால பாவம் மற்றும் மரணநிலையிலிருந்து எழுப்பும்படியான தேவையான உதவிகளை அவர் அளிக்கும்போது அது ஸ்தாபிதமாகும். இந்த மாபெரும் சமுதாய உயர்த்துதலானது அத்தியாவசியமானது என்று அநேகர் உணர ஆரம்பித்திருந்தாலும், அதனை நிறைவேற்ற இயலவில்லை. சுவிசேஷத்தை அறிவிப்பதானது உலகமனைத்தையும் மனமாற்றம் செய்வதற்கு ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, கேட்கிற காதையும், விசுவாச சிந்தையும், கீழ்ப்படிதலையும் உடையவர்களுமாயிருக்கிற மற்றும் ஆண்டவருடைய கட்டளையைப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறவர்களும், சுயப்பலித்தியாகத்தில் அவரைப் பின்பற்றுகிறவர்களுமாகிய ஓர் சிறிய எண்ணிக்கையிலடங்கியவர்களை உலகத்திலிருந்து வெளியே அழைப்பதற்கு மாத்திரமே இந்த சுவிசேஷ அறிவிப்பு ஏற்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக தேவன் தீர்மானித்திருப்பதுப் போன்றும், வேதாகமத்தில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டிருக்கிறதுப் போன்றும், உலகை மனந்திரும்பச் செய்வதற்கு முற்றிலும் வேறுபட்ட பல்வேறு அமைப்புகள் அவசியமானதாயிருக்கும். கிட்டத்தட்ட 20 நூற்றாண்டுகள் கடந்தும், இந்த காலத்தை ஒப்பிடுகையில் அங்கே ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றத் தங்கள் சிலுவையை எடுத்துக் கொண்ட உண்மையான சீஷர்கள் சிலர் மாத்திரமே இருந்தார்கள். நாம் ஏற்கனவே பார்த்தது போன்று மீதியானவர்களில் அநேகர் இரட்சகரைப் பற்றி ஒருபொழுதும் கேள்வியே படாதவர்களாய் இருக்கிறார்கள். அவர்களில் எவரும் நித்திய வேதனையில் வாதிக்கப்படவில்லை, மாறாக இன்னும் அவர்கள் அனைவரும் மகா சிறைச்சாலையாகிய மரணத்தில் தான் இருக்கிறார்கள். தெரிந்தெடுக்கப்படும் வகுப்பார்கள் அழைக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, விசுவாசமுள்ளவர்களென்று நிரூபிக்கப்பட்டு ராஜ்யத்தில் ஆண்டவர் மூலமாக தங்களுடைய ஸ்தானங்களில் அமர்த்தப்படும்வரை அவர்களும் அங்கேயே அதாவது மரண நிலையிலேயே காத்திருக்க வேண்டும். பின்பு பூமிக்குரிய ராஜ்யமானது வல்லமையோடும், மகா மகிமையோடும் வந்து சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்கப்படுவது தொடங்கும். (ஆதி. 22 : 16-18). இதுதான் வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை சொல்லப்பட்டக் காரியமாகும். அநேக நூற்றாண்டுகளாக வேதாகமம் காண்பிக்கிற இதுபோன்ற ஒரு நம்பிக்கையை, இணக்கத்தை, ஒற்றுமையை, இசைவிணக்கத்தை, வேறு எந்த ஒரு புத்தகமோ, எழுத்துக்களோ கொடுத்ததில்லை. வேத வாக்கியங்களின் நிலைப்பாட்டிலிருந்து காரியங்களை நோக்குபவர்களுக்கு, வேதாகமமானது தெய்வீக வெளிப்படுத்தல் என்றும், பழைய ஏற்பாட்டு பரிசுத்த மனுஷர்களால் எழுதப்பட்டது என்பதும், அவர்கள் தங்கள் சொந்த வீணான கற்பனைகளின்படி அல்லாமல், பரிசுத்த ஆவியினால் இயக்கப்பட்டு எழுதவும், பேசவும் செய்தார்கள் என்பதும் உறுதியான ஆதாரங்களின் ஒன்றாயிருக்கிறது. (2 பேது. 1 : 21). இந்தக் காரியங்களை நாம் மேலும் நன்கு ஆராய்வோம்.

**2012-ற்கான நமது கர்த்தருடைய ஞாபகார்த்த பஸ்கா ஏப்ரல் மாதம் 3 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்குமேல் என்பதை அறிவிக்கிறோம்.**

## மறைக்கப்பட்ட இரகசியம்

பழைய ஏற்பாடு முழுவதும், மேசியாவின் மகிமையான வருகையைக் குறித்தத் தீர்க்கதரிசனங்களும் அவருடைய அரசாட்சியானது ஆசீர்வாதமானதாயிருக்கும் என்ற மற்றத் தீர்க்கதரிசனங்களும் இணைந்து கூறுவதென்னவெனில், மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல இருந்தார் என்றும், அவருடைய மரணத்திற்கு அக்கிரமக்காரர்கள் ஏதுவாயிருந்தார்கள் என்றும் நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார் என்றும் அத்தீர்க்கதரிசனங்கள் விவரிக்கின்றன. இங்கே இரண்டு கருத்துக்கள் வெவ்வேறாகக் கூறப்பட்டிருக்கிறப்படியாலும், அவை வேண்டுமென்றே வரிசைப்படுத்தி வைக்கப்படாததாலும், யூதர்களால் அவைகளைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை. முதலில் அவர்கள் மகிமையையும், பின்பு இயற்கைச் சீற்றங்களோடு உபத்திரவங்களையும் எதிர்ப்பார்த்திருக்கலாம். தீர்க்கதரிசிகளுடைய தரிசனங்கள் அவைகளின் நிறைவேறுதல் காலம் வரைக்கும் புரிந்துகொள்ளப்படுவதற்கு ஆண்டவரால் நியமிக்கப்படவில்லை. தூதர்களும்கூட அவைகளை புரிந்துகொள்ளவில்லை என அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்குக் கூறுகிறார். **"உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைப் பண்ணினார்கள்: தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது: பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது: இவைகளை உற்றுப் பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்." (1 பேது. 1 : 10–12).**


இயேசு தமது சீஷர்களுக்குப் போதிக்கிறார்

இந்த காரியங்களைக் குறித்து முன்னமே தூதர்களே அறியமுடியாத நிலையில் இருக்கையில், அதுபோல யூத ஜனங்களும் முன்னமே அறிய முடியாதிருக்கையில், புறஜாதிகளைப் பொறுத்தவரையில் இதுபோன்ற காரியங்களைக் குறித்து அறிய வாய்ப்பே இல்லை. பரீட்சையானது யூதர்கள்மேல் வந்திருந்ததாகையால் அவர்களது எதிர்பார்ப்புகளான உடனடியான மகிமையானது ஏமாற்றமடையப்பட்டபோது, அதாவது முதலில் மனுஷக் குமாரன் அநேகக் காரியங்களில் பாடுபடவும், சிலுவையில் அறையப்படவும் வேண்டும் என்பதையும், இவ்வாறு விலைக்கிரயமாக பெற்ற மீட்பில் பிதாவினுடைய சித்தத்திற்கு அவரது உண்மைத்துவத்தை நிரூபித்து, இவ்வாறு மனுக்குலத்தின் மீதான அவரது அன்பை மெய்ப்பித்து, முதல் ஆதாமின் வீழ்ச்சியின் மூலம் அவர் காயம்பட்டது போன்று அதைச் சரிப்படுத்தும் விதமாக ஒவ்வொரு சிருஷ்டியையும் ஆசீர்வதிக்கும் அவருடைய ராஜ்யத்தின் மகிமைக்குள் பிரவேசிப்பார் என்பதையும் கற்பதற்கும், இதில் வழிநடத்தப்படுவதற்கும், எல்லாவித மதிநுட்பமும், இருதயத்தில் தாழ்மையான தன்மையும் கொண்ட உத்தம இஸ்ரவேலர்கள் மாத்திரமே தயாராக இருந்தனர்.

தெய்வீகத் திட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சமும், மறைக்கப்பட்ட இரகசியம் என அப்போஸ்தலன் அழைக்கிற "**கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்**" என்ற விஷயமும் ஆண்டவருடைய முதல் வருகைக்கு முன்பதாக அறியப்படவில்லை. (கொலோ. 1 : 27). இந்த மேசியாவானவர் அநேக அங்கத்தினர்களடங்கியவராயிருக்கிறார் என்பதும் அதற்கு இயேசு தலையாகவும், ஆண்டவராகவும் இருப்பார் என்பதும், பண்டைய காலத்தில் அனுமானிக்கப்படவில்லை. கல்வாரியில் நம்முடைய ஆண்டவருடைய பாடுகளுக்கும், ஆயிர வருட யுகத்தின் விடியற்காலையில் மகிமைகளோடு அவருடைய ராஜ்யத்திற்குள் அவரது பிரவேசத்திற்கும் இடைப்பட்ட நீண்ட இடைவெளியானது, விசுவாசத்தின் காலமாகவும், தெரிந்தெடுப்பின் காலமாகவும், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கும் காலமாகவும், சகோதரர்களாக அவரோடு பாடனுபவிக்கிற காலமாகவும், அவர்களது தலையானவரின் சரீர அங்கங்களாகும் காலமாகவும் இருக்கும் என அப்போஸ்தலர் சுட்டிக் காட்டுகிறார். ஆண்டவருடைய மகிமையான களிகூருதலுக்குள் பிரவேசிக்க முழுவதும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது அழைக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்படுகிற காலமாக சுவிசேஷ யுகம் இருந்தது. அவரது மணவாட்டியும், அவரது சரீரமுமாகிய சபை அங்கத்தினர்கள் அதிகபடியான கீழ்ப்படிதலிலும், ஒழுக்கத்திலும் அவர்களது அத்தியாவசியமான பாடங்களைப் பெற்று அவரால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படும்வரை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது காத்துக்கொண்டிருக்க வேண்டியதாயிருந்தது.

## நான் மறுபடியும் வந்து உங்களை சேர்த்துக் கொள்ளுவேன்

நம்முடைய ஆண்டவர் அவரது முதல் வருகையில் வந்து தனது மரணத்தைக் குறித்தும், அவரது

பரமேறுதலைக் குறித்தும் மற்றும் அவைகளின் அத்தி யாவசியத்தைக் குறித்தும் சீஷர்களாகிய சிறுகூட்டத்திற்கு படிப்படியாக வெளிப்படுத்தியிருந்தார். ஆனபடியால் மகிமைக்கு முன்னதாக கிறிஸ்துவின் பாடுகள் சம்பந்தமான சாட்சியங்கள் கண்டிப்பாக முந்தி நேரிட வேண்டும் என்று எதிர்ப்பார்த்திருந்தார்கள். இவர்களும் யூதர்களைப் போன்றே தங்களது சிந்தையிலும், இருதயத்திலும் வரப்போகிற ராஜ்யத்தின் மகிமைகளையே அறிந்திருந்தனர். அவர் மறுபடியும் வந்து அவர்களை தன்னோடு சேர்த்துக்கொண்ட பின்பு அவரது மகிமையில் பங்குள்ளவர் களாவார்கள் என அவர்களுக்கு உறுதிப் படுத்தி கூறினார். மேலும் அவர் “**நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்**” (**யோவா. 14 : 3**). “**நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்: நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் வரார்: நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்**” (**யோவா. 16 : 7**) என்றார். அவர் இவைகளை அவர்களோடு பேசுகையில் அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியினால் ஜெநிபிக்கப்படவில்லை. இந்த ஜெநிபிக்கப்படுதலுக்காக அவர்கள் பெந்தேகோஸ்தே நாள் வரையில் காத்திருக்க வேண்டியிருந்ததால், அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுவதை அவர் செய்து முடிப் பதுவரை அவைகளை அவர்களுக்கு நம்முடைய ஆண்டவரால் விவரிக்க முடியவில்லை. ஏனெனில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவர்களுக்கு இது முட்டாள்தனமாக இருக்குமாதலால் அவர் அதின் ஆழ்ந்த விளக்கத்திற்குள் செல்லாமல், சுபாவ மனுஷர்களிடத்தில் பேசுவது போன்று அவர்களிடமும் அவர் பேச வேண்டிய நிலை இருந்தது. இன்னும் அதிகமான வெளிப்படுத்தல் களை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதற்காக அவர் சென்று தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி வரும்பொழுது, அவர் முன்பு கூறியிருந்த அனைத்துக் காரியங்களையும் அந்த தேற்றரவாளன் மூலம் அவர் கொண்டுவரும்பொழுது, தெய்வீக ஏற்பாட்டின் ஆழமான காரியங்களை அப்போது புரிந்துகொள்ள ஏதுவானவர்களாய் இருப்பார்கள். அவர் மீண்டும் கூறியதாவது; “**இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.**” (**யோவா. 16 : 12**).



மோசே கிறிஸ்துவைக் குறித்து எழுதினார் அவரே கிறிஸ்துவுக்கு அடையாளமுமாவார்

நம்முடைய ஆண்டவர் அவருடைய மரணத்தைக் குறித்தும், மூன்றாம் நாளில் அவரது உயிர்த்தெழுதலைக் குறித்தும் சீஷர்களுக்குக் கூறியிருப்பினும், அவர்களது மனதானது யூதர்களின் வழக்கமான மனோபாவமான மேசியாவின் மகிமைப் பற்றிய காரியங்களின் மேல் நிலைக்கொண்டிருந்தபடியால் இதன் தாற்பரியத்தை உணர்ந்து கொள்ளவில்லை. நம்முடைய ஆண்டவர் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு கூட பன்னிருவர்களில் ஒருவனாகிய பேதுரு “**இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை**” என்று கூறி இயேசுவைக் கடிந்து கொண்டான். (**மத். 16 : 22**). அவருடைய உயிர்த் தெழுதலுக்குப் பிற்பாடு காரியங்களை அவர்களுக்கு விளக்கிக் கொடுப்பதற்காக சீஷர்களோடு நம்முடைய ஆண்டவர் இருக்க வேண்டியிருந்ததில் எவ்வித ஆச்சரியமுமில்லை. முதலாவது அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதையும், இரண்டாவது நீண்டகாலம் மனுஷீகத்தில் இல்லாமல், மாறாக ஆவி ஜீவியாக, ஆவிக்குரிய எல்லா வல்லமை களுடனும் அவர் மாற்றமடைந்தார் என்ற இந்த இரண்டு காரியங்களைத் தெரி விப்பதற்கு பல்வேறு நிலைகளில், பல்வேறு சம்பவங்களில் ஆபிரகாமின் நாட்களில் தூதர்கள் செய்தது போன்று ஆடை யோடுகூடிய, மாம்சமும் எலும்பும் கொண்ட சரீரங்களை ஏற்படுத்திக் கொண்டு தோன்றினார்.

எம்மாவூருக்கு போகிற வழியில் இயேசுவோடு நடந்து கொண்டிருந்த இரண்டுபேரிடம் பேசும்போது “***தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே***” என்று நம்முடைய ஆண்டவர் கூறினார். அவர்கள் தீர்க்கதரிசிகள் பேசின ஒரு பகுதியை விசுவாசித்தார்கள். ஆனால் எச்சரிக்கை யாயிருக்க வேண்டியதும், கடைபிடிக்க வேண்டியதுமான மற்றப் பகுதிகளை அசட்டை செய்தார்கள். மேலும் நம்முடைய ஆண்டவர் தொடர்ந்து “***கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டி யதில்லையா? என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.***” (**லூக். 24 : 25–27**). தீர்க்கதரிசனங்களின் அர்த்தங்கள்அப்போஸ்தலர்கள் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதின் ஆழ்ந்த மற்றும் தெளிவான கருத்துக்கள் ஆவியின் வழிநடத்து தலின் மூலமாக நமக்கு அருளப்பட்டிருப்பது நமது சிலாக்கியமாகும்.

## கிறிஸ்துவைக் குறித்து மோசே எழுதியது

மோசேயினுடைய எழுத்துக்களை நாம் திரும்பிப்பார்ப்போமானால், கிறிஸ்துவுக்கான பாடுகளையும் அதைத் தொடர்ந்து வரும் மகிமைகளைக் குறித்தும் தெளிவாக விவரித்திருப்பதைக் காணலாம். கிறிஸ்துவின் முதல் வருகையானது மகா பாவநிவாரணப் பலியாகவும், இரண்டாம் வருகையானது மகிமையான தீர்க்கதரிசி யாகவும், ஆசாரியராகவும், இராஜாவாகவும், அவர் மூலமாக ஆசீர்வாதங்கள் வழங்கப்பட வேண்டியது என்றும் மோசே கற்பித்தார். அடையாளமான பாவநிவாரண நாளில் செய்யப்பட்ட அடையாளமானப் பலிகளை நாம் இங்கே காணலாம். ஆசாரியன் முதலில், காளையை

பலியிட்டதானது அவரையே குறிக்கிறது. அது சிலுவையில் பாவங்களுக்கான பலியின் மகா அஸ்திபாரத்தை ஏற்படுத்தினதைக் குறிக்கிறது. இரண்டாவதாக சபையை அடையாளப்படுத்தும் வெள்ளாட்டைப் பலியிட்டார். அது அவரது சரீர அங்கத்தினர்களாக அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரோடு இணைக்கப்படுகிற சபையை அடையாளப்படுத்தியது. நிறைவேறுதலான பாவ நிவாரண நாளானது முழு சுவிசேஷ யுகம் மற்றும், ஆயிர வருட யுகங்களாகும். அதில் கிறிஸ்துவின் பாடுகள் நிறைவடைந்து விட்டன. முதலில் நமது மீட்பருடைய பாடுகள், இரண்டாவது அவருடைய புண்ணியத்தின் மூலமாக பரிசுத்தமாக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட அவரது சரீரமாகிய சபையின் பாடுகள். இவை ஆயிர வருடத்தின்போது ஒப்புரவாகுதலை நிறைவேற்றுவதிலும், பூமியின் எல்லா வம்சங்களையும் பூரணத்திற்குக் கொண்டுவருவதற்கும் வழிநடத்துகிறது. (ஆதி. 22 : 17, 18).

அடையாளத்தில் பாவநிவாரண நாளில் பலியின் விசேஷ அம்சங்களை முடித்து, பிரதான ஆசாரியனானவன் பாவ நிவாரணத்தை ஏற்படுத்தி, அவனுடைய ஆசாரியத்துவத்திற்கான எல்லாவித மகிமையான ஆடைகளையும் உடுத்தி ஜனங்களுக்கு முன்பாக வருவதானது, மகா மேன்மையும் அருமையுமான தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இயேசுவில் நிறை வேற்றப்பட்டதை அடையாளப்படுத்தியதோடு, இயேசுவின் மேலும், மறைமுகமாக அவரது சரீரமாகிய சபையின் மேலும் கொடுக்கப்பட்ட வல்லமையையும், மகா மகிமைகளையும், கனத்தையும் அடையாளப்படுத்துகிறது. பிரதான ஆசாரியன் தனது கைகளை அப்பொழுது உயர்த்தித் தரையில் முகங்குப்புறப் படுத்திருக்கிற ஜனங்களை ஆசீர்வதிப்பதானது, இங்கே நிறைவேறுதலில் மிகவும் சமீபமாகிய இந்த பாவநிவாரண நாளின் முடிவில் மணவாட்டி வகுப்பாரும், அவரது சரீர அங்கத்தினர்களுமாகிய சபையும், பரலோக வல்லமைகளையும், தெய்வீக சுபாவத்தின் அழியாமையையும், மகிமையையும், கனத்தையும் அணிந்து கொண்டிருக்கும்போது, தற்போது மானத, சடத்துவ, சன்மார்க்கத்தில் பலவீனமாகவும் இழிவான தாகவும், பூமியின் தூளிலே படுத்துக் கொண்டிருக்கிற பூமியின் திரளானவர்களை ஆசீர்வதிப்பதற்காக மேசியா வானவர் இராஜாவாகவும், ஆசாரியராகவும், தீர்க்க தரிசியாகவும் வெளிப்படுவார். அடையாளத்தில் ஆசீர்வாதத் திற்குப் பின்பு ஜனங்கள் எழும்பி, சத்தமிட்டது போன்று, நிறைவேறுதலிலும் ஆயிர வருட யுகத்தில் ஆண்டவருடைய ஆசீர்வாதங்கள் எல்லா ஜனங்களையும் சென்றடைந் திருக்கும்பொழுது, அதன் விளைவாக உலகமானது உயர்த்தப்பட்டிருக்கும். நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தம்முடைய சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால், நம்மைக் கிரையத்துக்கு வாங்கியவருக்கும், இரட்சிப்பின் திட்டத்தின் மகா ஆக்கியோனும் எல்லாருக்கும் பிதாவாக இருக்கிறவருக்கும் மகா சப்தத்துடன் துதியை செலுத்து வார்கள்.

## ஏனோக்கு தீர்க்கதரிசனம் உரைத்துக் கூறியதாவது

**"இதோ ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான் களோடுங்கூட கர்த்தர் வருகிறார்."** **(யூதா 15).**

ஏனோக்கினுடைய இந்த தீர்க்கதரிசனத்தின் மூல ஆதாரம் நம்மிடம் இல்லை. ஆயினும், அதைப் பற்றின அப்போஸ் தலனுடைய மேற்கோளானது முற்றிலும் போதுமானதாக இருக்கிறது. ஏனோக்கின் காலத்திற்கும், அப்போஸ்தலன் அவரது வார்த்தைகளில் எடுத்துக்கூறியக் காலம் வரைக்கும் இரண்டாயிரம் வருடத்திற்கும் மேலாக ஆனபோதிலும் அவற்றில் ஒரே செய்தியே அடையாளத்திலும், உருவகத் திலும், பொதுவான வாக்கியங்களிலும் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை நினைவுகூர்வதற்காக பல்வேறு காலக்கட்டங்களில் அவருடைய பல்வேறு தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் கொடுத்தச் செய்தியானது இசைந்திருக்கிறபடியால் அது தேவனுடைய புஸ்தகம் என்பதை நமக்கு விவரிக்கின்றது. தேவனுடைய ஆவி யானது அவரது வார்த்தைகளாகக் கூறப்பட்ட இவை அனைத்தையும் ஊக்கப்படுத்தி, இயக்கியது எவ்வளவு தெளிவாக விளக்குகிறது. வேதாகமம் தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்பதற்கு ஒரு முழுமையான ஆதாரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் சொல்லப் பட்ட அநேகக் காரியங்கள் மற்ற மதசம்பந்தமான அனைத்து புத்தகங்களிலிருந்தும் முற்றிலும் வித்தியாசமானதும், வேறுபட்டதும், தனித்துவம் வாய்ந்ததுமாயிருக்கிறது. வேதாகமத்தின் எழுத்தாளர்கள் புறஜாதிகளிடத்திலிருந்து சிறிதளவாகிலும், எதுவாகிலும் எடுத்துக் கொள்ளவில்லை. எந்த ஒரு புறஜாதிப் புத்தகமும் ஒரு மேசியா இவ்வாறு முதலில் பாடுபடவேண்டும் என்றோ, ஜனங்களை மீட்கவேண்டும் என்றோ, பின்பு அந்த மீட்கப்பட்டவர்கள் மத்தியிலிருந்து அவருடைய உடன் சுதந்திரர்களாயிருக்கிற சிறுமந்தையை தெரிந்தெடுத்ததற்குப் பிற்பாடு மீண்டும் வந்து பூமியினுடைய அனைத்து வம்சங்களையும் ஆசீர்வதிப்பதின் மூலம் அவரது கிரியை நிறைவேறும் என்றோ கூறுவதில்லை. வேதாகமம் மாத்திரமே தொடக்கம் முதல் முடிவுவரை இந்த அற்புதமான சம்பவங்களை இணக்கத்துடனும், உறுதியுடனும் கூறுகிறது.

இதுவே அப்போஸ்தலர்கள் அனைவருக்கும் மையக்கருவாகவும் இருந்தது. அவர்கள் "**சகோதரரே கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்**" "**நீங்கள் புழிவாங் காமல்**" உங்கள் சத்துருக்களுக்குரிய பலன்கள் மற்றும் உங்கள் பரீட்சைகள், கஷ்டங்கள் எல்லாவற்றையும் ஆண்டவருடைய கரத்தில் விட்டுவிடுங்கள் என்று சபைக்கு தொடர்ந்து புத்திமதி கூறினார்கள். எனவே அவரது சொந்த நேரத்தையும், தெய்வீக விருப்பத்தையும் உங்களில் நிறைவேற்றுகிற வழியாக அவரை அனுமதியுங்கள். ஏனெனில் நீங்கள் அவருடையவர்கள், உங்கள் விருப்பங் களும் அவருடையவைகள். மொத்த கிரியைகளும் அவரு டையவைகள். நீங்கள் முயற்சி செய்தாலும் அதை உங்களால் தடுக்க முடியாது. மாறாக அப்படிச் செய்வதற்கு முயற்சித்தீர்களானால் தேவனுடைய சமாதானத்தின் களிக்கூறுதலிலிருந்து நீங்கள் தடுக்கப்படுவீர்கள். ஏனெனில் தற்காலத்து கஷ்டங்கள், பரீட்சைகள் ஆகியவற் றின் கீழும்கூட நீங்கள் களிக்கூர வேண்டும் என்று அவர் திட்டம் பண்ணியிருக்கிறார்.

## வல்லமையிலும், மகா மகிமையிலும்

அநேக வேத வாக்கியங்கள் ஆண்டவருடைய இரண்டாம் வருகையைப் பற்றிக் கூறினாலும், இருண்ட யுகத்தின்போது தப்பறையானது கிறிஸ்தவ மண்டலத்திற்குள் நுழைந்து, ஆண்டவருடைய ஜனங்களின் மனதில் இப்படிப்பட்ட ஆசீர்வதிக்கப்பட்ட பிரகடனங்களை செயலற்ற தாக்கியதோடு, அவைகளின் மதிப்பையும் குறைத்து அர்த்தமற்றவைகளாக்கியது. உலகத்தின் நம்பிக்கையைப் போன்று சபையின் நம்பிக்கைகள் அனைத்திலும் சிறு எண்ணிக்கையானவர்கள் மட்டுமே உணர்ந்து வேத வாக்கியங்களின்படி தமது சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டவருடைய இரண்டாம் வருகை யின்மேல் நிலைக்கொண்டும், காத்துக் கொண்டுமிருக்கி றார்கள். இவர்கள் தெய்வீக திட்டத்தில் நம்முடைய ஆண்ட வரின் இரண்டாம் வருகையானது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை அறிந்தனர். பெரும்பாலானவர்கள் இரண்டாம் வருகையின் விதத்தைக் குறித்து முற்றிலும் ஒரு தப்பெண்ணத்தின் மூலமாக பக்கவழியைப் பெற்றிருப்பது தெளிவாகிறது. இவர்கள் காரியத்தை நோக்குவதில் மிகவும் உலகப் பிரகாரமாகவும், மிகவும் வளர்ச்சியடையாத முதிர்ச்சியடையாத கருத்திலும் அதனைப் பார்க்கிறார்கள். இவர்கள் மேசியாவானவர் பூமிக்குரிய ஒரு சிங்காசனத்தின் மேல் உட்காரும்படியாக மனுஷனுக்குரிய மாம்ச சரீரத்தில் மீண்டும் வருவார் என்றும், இதைப் போன்றே அவரது சபையும் பூமிக்குரிய மகிமையில் இணைக்கப்பட்டிருக்கும் என்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள். அமெரிக்காவின் தலைநகரமாக வாஷிங்டன் DCயை நாம் பார்ப்பது போன்று அல்லது பிரெஞ்சுக்காரர்கள் பாரீஸை தலைநகரமாகவும், அரசாங்கத்தின் இருக்கை யாகவும் பார்ப்பது போன்றதான இதே பிரகாரம் மொத்த உலகமும் பூமிக்குரிய எருசலேமை அதன் தலைநகரமாகப் பார்க்கும் என மாம்சப்பிரகாரமாகக் கருதுகின்றனர். நம்முடைய ஆண்டவருடைய வல்லமையையும், மகா மகிமையையும் பற்றிய இந்த தவறான சிந்தையுடைய அநேக நல்ல ஜனங்களின் சிந்தையில் ஆண்டவருடைய இரண்டாம் வருகையைப் பற்றின கோட்பாட்டிற்கு எதிரான மனமாற்றத்திற்கு அதிக அளவு காரணமாயுமிருக்கிறது. இதுபோன்ற எதிர்பார்ப்புகளின் இப்படிப்பட்ட காரணம் நிச்சயமாக வேதாகமத்தின் பொதுவான நடைக்கு மாறானதாக இருக்கிறது. எனவே "ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுப் பெறப் போகிறீர்களா?" என்று கேட்கிறது. (கலா. 3 : 3).

மாறாக நம்முடைய ஆண்டவர் அவரது உயிர்த்தெழுதலிலிருந்து "**ஆவியாயிருக்கிறார்**" (2 கொரி. 3 : 17) என்றும் அவர் வல்லமையோடும், மகா மகிமையோடும் மீண்டும் வரும்பொழுது கல்வாரியில் பலியிடப்படும் மாம்சீகத்தில் வராமல் ஆவிக்குரிய மகிமையோடும், வல்லமையோடும் வந்திருப்பதாக இருக்கும். அதாவது தமஸ்குவுக்குப் போகிறபோது ஒரு கனப்பொழுது தரிசனத்தால் அப்போஸ்தலன் தான் பிடிக்கப்பட்டதும், அந்த சம்பவத்தில் நண்பகலில் சூரிய னுக்கும் மேலான ஒரு பிரகாசத்தின் மூலம் அவர் தாக்கப்பட்டதுமாக அப்போஸ்தலனுடைய சாட்சி இருக்கி றதையும் நாம் அறிகிறோம். ராஜ்யத்தின் நிலைகளுக் குள்ளும், மகிமைகளுக்கும் பிரவேசிப்பதற்கு முன்பதாக அவர்கள் அனைவரும் "மாற்றமடைந்திருக்க" வேண்டும் என அப்போஸ்தலன் சபைக்கு உறுதிப்படுத்துகிறார். மனுஷீகத்திலிருந்து ஆவிக்குரிய நிலைகளுக்கும், மனுஷீக அல்லது பூமிக்குரிய நிலையிலிருந்து ஆவிக்குரிய நிலையின் பூரணத்திற்கும், அதாவது பேதுரு அப்போஸ் தலன் குறிப்பிடுகிறது போன்று "தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும்படிக்கு" மாற்றமடைய வேண்டும் (2 பேது. 1 : 4). அவர்கள் அனைவரும் மாற்றமடைய வேண்டும் என்ற அவருடைய தொடர்ச்சியான விஷயங் களில் இதையே அப்போஸ்தலர் நிச்சயமாக அர்த்தப்படுத் துகிறார் என்பதும் தெளிவாகிறது. ஏனெனில் "**மாம்சமும் இரத்தமும் பரலோக இராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது.**" **(1 கொரி. 15 : 50, 51).** (தொடரும்.....)

# "நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே"

**"அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்றார். யோவா. 6 : 66–68.**

"**நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?**" என்று பதிவு செய்யப்பட்டிருக்கிற நமது எஜமானருடைய வார்த்தைகளில் சிறிதளவு ஏமாற்றம் காணப்படுகிறதாய் இருக்கின்றது. ஒவ்வொரு செயலுக்கும் வார்த்தைக்கும் காரணத்தை அறியும் வழக்கத்தின்படியே இதனை நாம் ஆராய்வோம். அநேகர் தம்மைவிட்டு போனதின் நிமித்தம் நமது எஜமானர் ஏன் கவலையடைந்தார்? அநேகர் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் உடையவராயிருந்தாரா? அவரது நம்பிக்கை யானது வெறும் எண்ணிக்கையின் மீது இருந்ததா? இப்பொழுது, மூன்று வருடங்கள் நான் போதித்த பின்பு என்னைப் பின்பற்றியவர்கள் அநேகர் என்னை தன்னந்தனியே விட்டதைப் பரிசேயர்கள் காணும்போது அவர்கள் என்ன சொல்வார்களோ என அவர் தனக்குதானே சொல்லிக் கொண்டாரா? திசைமாறி போனவர்களினிமித்தம் தன்னுடைய வருமானம் பாதிக்கப்படும் என பயந்தாரா? இல்லை, இந்த காரியங்கள் ஏதுமில்லை; ஏனெனில், அவர் ஏற்கெனவே **தம்மைத்தாமே வெறுமையாக் கியிருந்தார் (பிலி. 2 : 7).** "**எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ: அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்**" என ஏற்கெனவே தம் சீஷர்களுக்குச் சொல்லியிருந்தார்.

**(லூக். 6 : 26).** இரண்டு சிறிய மீன்களையும் ஐந்து வாற் கோதுமை அப்பங்களையும் ஐயாயிரம் பேருக்கு போஷிக்கும் வல்லமையும் அவருக்கு இருந்தது. விசுவாசமுள்ளவர்களாய் இருக்க போகிறவர்கள் மொத்தத்தில் "***சிறுமந்தை***" எனவும், விசுவாசியாத சீஷர்கள் யார் யார் எனவும் அவர் முன்பே அறிந்திருந்தார். (யோவா. 6 : 61, 64).

பின்னே ஏன் அவர் தம்முடைய வார்த்தைகளில் தன்னுடைய கூட்டத்தாரில் ஓர் எண்ணிக்கையுடையவர்கள் போனதினிமித்தம் கவலையை வெளிப்படுத்தினார்? ஏனெனில் அவர் உண்மையுள்ளவராகவும், நல்லவராகவும், இரக்க முள்ளவராகவும், தம்முடைய சிநேகிதர்களை சிநேகித்தபடி யினாலும், மேய்ப்பன் கொல்லப்படுகிற வேளை நெருங்குகிற தினால் அனைத்து ஆடுகளும் ஓடிப்போகும் என்பதாலும் ("***சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்***" **மத். 26 : 56–** இது பின்னர் நிறைவேறியது), தனிமைப் படுத்தப்பட்ட கவலை அவரை சூழ்ந்து கொண்டதால், "***நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?***" என்றார். சிநேகிதர்களோடு அவர் வைத்திருந்த ஐக்கியத்தின் நிமித்தமாக இந்த இரக்க அன்பானது ஒரு பெலவீனம் அல்ல, ஆனால் மாறாக, அது கிறிஸ்தவ குணாம்சத்தின் ஒரு பகுதி ஆகும். ஆனால், தம்முடைய சீஷர்கள் அவரை தமது பிதாவின் திட்டத்தில் அவருக்காக குறிக்கப்பட்டிருக்கிற பலியின் ஓட்டத்திலிருந்து திரும்பும்படி அவர்கள் கூறியதை நமது ஆண்டவர் அனுமதித்திருப் பாரானால் அது பெலவீனத்தை வெளிப்படுத் தியிருக்கும். அப்படியொரு பெலவீனம் வெளிப்படவில்லையே. மாறாக, சில நாட் களுக்கு பின்னர் பேதுரு வெகுளித்தனமாக, நமது ஆண்டவர் பலியிடப்படுவதை வேண்டாம் என தடுக்க முயற்சித்ததை, அவர் தீர்க்கமாக "**எனக்கு பின்னாகப் போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்: தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்**" எனப் பதிலளித்தார். **(மத். 16 : 23).**



"ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" யோவா. 6 : 68

## "நாங்கள் யாரிடத்தில் போவோம்"

"**ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே**" என்ற அப்போஸ்தலனாகிய பேதுருவின் வார்த்தைகள் அர்த்தம் ததும்பியவைகளாக உள்ளன. நியாயப்பிரமாணத்தை கடைப் பிடிப்பதினால் தேவனுடைய தயவையும், நித்திய ஜீவனையும் நாட முடியுமா என்பதை பரி. பேதுரு அறிந்திருந்தார். மேலும் தாழ்மையுள்ள குணமுடைய யூதர்களைப் போன்று, பேதுருவும், பரிசேயர்களின் போதனையினாலும், தன் சொந்த மனசாட்சி யினாலும் ஏமாற்றமடைந்தவராய் இருந்தார். சந்தேகமில்லாமல், மேலும் எதிர்கால ஜீவியத்தைக் குறித்த பல்வேறு புறஜாதி தத்துவங்களைக் கொஞ்சம் அறிந்திருந்தபடியினாலும், அவைகள் யாவும் மனுஷ யூகங்களாகவும் அனுமானங்களாகவும் இருக்கிறதென்பதையும் அவர் அறிந்திருந்தார்.

மூன்று வருடங்களாக பேதுரு இயேசுவை அறிந்திருந்தபடியினால் நித்திய ஜீவனைக் குறித்த அவருடைய வார்த்தைகளைக் கேள்விப்பட்டிருந்தார். அவருடைய போதனை யானது யூகத்தின் அடிப்படையினால் ஆனதல்ல. "**அவர் வேதபாரகரைப் போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தார்**" **(மத். 7 : 28).** நியாயப்பிரமாணத் தைக் கைப்பிடிப்பதின் மூலமாய் நித்திய ஜீவனை எதிர்நோக்கி யிருங்கள் என அவர் போதிக்கவில்லை, ஏனெனில், இது முடியாத காரியமென அவர்கள் அறிந்திருந்தார்கள். அவருடைய போதனையானது மற்ற ஒவ்வொரு உபதேசியார்களிடமிருந்தும் முற்றிலும் மாறானதாகவும் வித்தியாசமாகவும் இருந்தது. ஆதாமின் பரீட்சையினாலும் கீழ்ப்படியாமையினாலும் ஜீவிப்பதற்கான உரிமையை முழு மனுக்குலமும் இழந்து போயிருந்தது. ஆகையால் அவர் ஊழியம் கொள்ளும்படியோ அல்லது கனம் கொள்ளவோ வராமல், மனுஷருக்கு ஊழியஞ்செய்து, முடிவாக, தம்முடைய ஜீவனை ஆதாமும் முழு மனுக்குலமும் இழந்துபோன ஜீவனுக்கான ஈடுபலியாக விலைக்கிரையமாக கொடுப்பதற்கே தாம் பூமிக்கு வந்ததாகவும் அவர் அவர்களுக்குப் போதித்திருந்தார். (மத். 20 : 28).

இயேசுவினுடைய போதனை என்னவெனில், இந்த மீட்கும் பலியின் பலனாக தெய்வீக அன்பினாலும், ஒழுங்கி னாலும் அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுப்பார் என்பதே. அவர்களுக்கு மட்டுமல்லாமல், "**பிரேத குழியிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்.**" **(யோவா. 5 : 25, 28, 29).** அப்பொழுது அனைவரும் நித்திய ஜீவனைப் பெறும் சிலாக்கியத்தை பெறுவார்கள். பேதுரு இந்த எளிமையான, அழகான சுவிசேஷத்தைக் கேட்டிருந்தார். இதுவே, நித்திய ஜீவனைக் குறித்த உண்மையான மிகுந்த நற்செய்தி யாகும். இயேசுவே தேவனால் உலகத்திற்கு ஜீவனை அளிக்கும்படியாக அனுப்பப்பட்ட மேசியா எனவும், **உலகத்திற்கு வந்து ஒவ்வொரு மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி** எனவும் பேதுரு அறிந்தி ருந்தார். **(யோவா. 1 : 9).**

அப்படியிருக்க, இதன்படி, "**ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே**" என பேதுரு பதிலளித்தது ஆச்சரியமல்ல. பேதுருவின் விசுவாசமும் நம்பிக்கையும் கிறிஸ்துவின் போதனைகளை அடிப்படையாகவும், உறுதியாயும் கொண்டிருந்தன. வேறு எங்கும் இதுபோல விசுவாசமும் நம்பிக்கையும் ஏற்பட்டதாகக் காணப்படவில்லை. இவை இன்றைய புத்தியுள்ள விசுவாசிகளுக்கும் உண்மையாக இருக்கின்றது. ஏனெனில், கிறிஸ்துவின் மரணமானது மையக் கருத்தாகவும் அச்சாணியாகவும் இருக்கிறது என்றும், சக்கரத்தின் இடைக் கம்பிகளாக (spokes) அன்பும், தேவனுடைய தயவும், அவருடைய எண்ணிலடங்கா விலையேறப்பெற்ற வாக்குத் தத்தங்களும் வெளி வட்டமாகிய நித்திய ஜீவனுக்கு வந்து சேருகின்றன என்றும், இந்த அற்புதமான ஜீவனுக்குரிய வார்த்தைகளை அவர்கள் கேட்டும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சத்தியத்தை ஒருமுறை கண்டும், நித்திய ஜீவனுக்குரிய

வசனங்களையும் நற்செய்தியையும் ஒருமுறை கேட்ட பிற்பாடு, இதற்கு மாற்றாக அவர்கள் எதைப் பெற முடியும்?

விசாலமான நோக்குடன் பார்த்தால், கான்ஃபுசியஸ் , புத்தர் , பிரம்மா, ஜரோஸ்டர் போன்றவர்களுடைய தத்துவங் களும் இருக்கிறதை நாம் பார்க்க முடியும். ஆனால் அவைகள் நம்மைத் திருப்திப்படுத்தாது. பரிணாமத்தை (Evolution) குறித்து இந்த உலக ஞானமானது யூகிக்கிறதை நாம் கேள்விபடுகிறோம். பிரோட்டோபிளாசத்திலிருந்து (Protoplasm) தவளைக் குஞ்சு (tad pole) உருவானதென்றும், அவற்றிலிருந்து குரங்கும், குரங்கி லிருந்து மனிதனும் உருவானான் என்று பரிணாமவாதம் கூறுகிறது. இன்னும் மேலாக, மனிதனை விட மேலான நிலைக்கு தொடர்ந்து வளர்ச்சி அடைந்துகொண்டே வருகிறானென்று யூகிக்கப்படுகிறது. அதுவே நம்பப்படுகிறது. ஆதியில் புத்தியுள்ள தேவன் என ஒருவர் இருந்தாரோ இல்லையோ, ஆனால் முழு பரிணாம வளர்ச்சியடைந்த பின்பு, முடிவாக கோடிக்கணக்கான ஞானமுள்ள வல்லமையுள்ள தேவர்கள் இருப்பார்கள் என பரிணாமவாதம் உறுதியளிக் கிறது. ஆனால் நமது இருதயங்கள் இத்தகைய கண்மூடித்தனமான யூகங்களை விட்டு, "**அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை**" என்று புகழப்பட்ட இந்த இயேசு பேசிய ஆச்சரியமான ஜீவ வார்த்தைகளுக்குத் திரும்பியிருக்கின்றன. அந்த வார்த்தைகளில் உலகம் கொடுக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான இளைப்பாறுதலும் சமாதான மும் இருக்கின்றது.



இந்த மாபெரும் போதகருடைய கட்டளைகளைப் பின்பற்றுவதினால், அனை வருக்காகவும், அவர் உண்டுபண்ணியிருக்கிற இந்த நித்திய ஜீவனைக் குறித்து நாம் மென்மேலும் கற்றுக்கொள்கிறோம். காலத்திற்கேற்ற சத்தியமாக, நித்திய ஜீவனாகிய இந்த வெகுமதி அவரை அன்பு கூருகிறவர்களுக்கு மட்டுமே உரியதாகும் என நமக்கு அவர் கற்று தந்திருக்கிறார். அதாவது, மீட்கப்பட்ட மனுக்குலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டு தங்களுடைய அன்பின் கீழ்ப்படிதலால் பாத்திரவான்களாக நிரூபித்ததினால் ஆபிரகாமின் வித்தா னார்கள். (கலா. 3 : 8, 16, 29). இவர்கள், ஆயிர வருஷ யுகத்தின்போது, மீட்கும் பலியினாலுண்டான இரத்தத்தினால் முத்தரிக்கப்பட்ட புது உடன்படிக்கையின் கீழ் விசுவாசத்துடனும் மனப்பூர்வமான கீழ்ப்படிதலுடன் இழந்து போனதைத் திரும்பப் பெறும் சந்தர்ப்பத்தில் (சிலாக்கியத்தில்) நித்திய ஜீவனுடன் மானிட பூரணத்திற்கு திரும்பும் பூமியின் வம்சங்களுக்கு அறிவைப் போதித்து ஆசீர்வதிப்பார்கள். இது முந்தைய காலத்தில் சொல்லப்பட்ட அதே சுவிசேஷம் தான். அப்பொழுது சொல்லப்பட்ட அதே நித்திய ஜீவனைப் பற்றிய வார்த்தைகள் தான், இப்பொழுது அதின் மகா நிறைவு நெருங்குகிறபடியால் விரிவாகவும், பெரிதாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

## அபாத்திரர்களை கொழித்தெடுக்கவே பரீட்சைகள் வருகின்றன

யூத யுக அறுவடையின்போது, நமது ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்கு "**நித்திய ஜீவ வசனங்களை**" உபதேசித்த பின்னர், கோதுமையைக் கொழிக்கிறது போன்று "**இடறல்களை**" அவர்கள் மீது வரும்படி அனுமதித்தபோது, கூறியதாவது, "**இடறல்கள் வராமல்போவது கூடாத காரியம்**" **(லூக். 17 : 1)** என்றார். எந்தெந்த நபர்கள் நல்ல கோதுமை எனவும், எந்தெந்த நபர்கள் பதராகவும் வளர்ச்சியடையாத சாவியாகவும் இருக்கி றார்கள் என்பதை இத்தகைய பரீட்சைகள் நிரூபிக்கின்றன. இரண்டு வகுப்பார் விசேஷமாக கொழிக்கப்படுகிறார்கள். (1) தகாத ஆர்வமும் சிறிதளவே விருப்பமுமுள்ள வகுப்பார், மற்றும், (2) தற்காலிகமாக நீதிமான்களாக்கப்பட்ட வகுப்பார். – இவர்கள் நம்முடைய ஆண்டவருடைய உவமையில் (மத். 13 : 5, 6, 20, 21) குறித்துக் காட்டப்பட்டிருக்கிற குணாம்சத்தில் ஆழமான வளர்ச்சி இல்லாதவர்களாவர். கற்பாறை நிலத்தைப் போன்ற இவர்கள் மகிழ்ச்சியோடு சத்தியத்தைப் பெற்று ஆனால் ஆழ்ந்த விருப்பமும், அன்பும், ஆத்மார்த்தமாகவும், தேவனுக்கும் சத்தியத்திற்கும் அர்பணித்து பிரதிஷ்டையும், இராதபடியினால், உபத்திரவமும் துன்பமும் எழும்போது இவர்கள் இடறி, பின்னாக திரும்பி, விசுவாசமுள்ளவர்களாகவோ அல்லது ஆண்டவரோடோ இவர்கள் நடவாமல் விழுந்து போனார்கள்.

இப்பொழுது சுவிசேஷ யுக அறுவடையிலும் இது உண்மையாக இருக்கிறது. நம்முடைய கண்கள் பாக்கியமுடையவைகள். ஏனெனில், அவைகள் யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டின் அநேக "**ஆழ்ந்த காரியங்களைக்**" கண்டிருக்கின்றன. நமது காதுகளும் பாக்கிய முடையவைகள், ஏனெனில், மகா போதக ருடைய பாடங்களை – நித்திய ஜீவ வசனங் களையும், மகிமை, கனம், அழியாமையின் வசனங்களையும் ஆச்சரியமான தெளிவுடன் அவைகள் கேட்டிருக்கின்றன. நாம் இப்பொழுது ஆண்டவருடைய ஒழுங்கின்படியே பரீட்சைகளுக்கும் கொழித்தல்களுக்கும், தயாராக இருக்க வேண்டும். இப்பொழுது, மறுபடியும், எல்லாவற்றையும் நிரூபிப்பதற்கும் அல்லது பிரதிஷ்டை செய்யாதவர்களும், ஆழ்ந்த குணாம்சம் இல்லாதவர்களும், கடிந்து கொள்ளுதலையும் நீதியின் நிமித்தம் துன்பப்படு தலையும் சகிக்காதவர்களும் திரும்பிப் போவதற்கும் இடறல்கள் வரவேண்டியது நிச்சயம் அவசியமாகும்.

ஆண்டவருடைய அங்கீகாரம் பெற்ற அனைவரும் நிச்சயமாக ஓர் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாராகவும் ஓர் விசேஷமான உற்சாகமுடைய ஜனங்களுமாவர். **உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாதிருங்கள் (1 பேது. 4 : 12).** உண்மையில், "**உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளி யாகும்படிக்கு**" இடறல்களும் பிரிவினைகளும் அனுமதிக்கப் படுகின்றன. **(1 கொரி. 11 : 18, 19).** உத்தமர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், ஏனெனில் அவர்கள் பரீட்சையை சகித்து, சத்தியத்தில் உறுதியுடன் நிலைத்து நிற்கிறார்கள்.

**"பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினல் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்." லூக். 22 : 31, 32.**

***

# பொருளாதாரம், சபை மார்க்கம் மற்றும் சமுதாயம் அசைக்கப்படுதல்

**"அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப் பண்ணிற்று: இன்னும் ஒரு தரம் நான் பூமியை மாத்திரமல்ல வானத்தையும் அசையப் பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இன்னும் ஒரு தரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல மாறிப் போம் என்பதைக் குறிக்கிறது."**

**(எபி. 12 : 26, 27).**

*நியூயார்க் வாஷிங்டன் மற்றும் கிளிவ் லேண்ட் சபைகளின் போதகரும் லண்டன் புரூக்ளின் ஆசரிப்புக் கூடாரத்தின் போதகராகிய C.T. ரசல் அவர்களால் சொற்பொழிவாற்றப்பட்டது (முதலில் 1909-ல் வெளியிடப்பட்டது - தற்பொழுது சிறிய அளவில் சேர்ப்புகளுடன் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது).*

*இந்தக் கட்டுரையில் போதகர் ரசல் முன்னறிந்து கூறியவைகள் மிகவும் துல்லியமாக உள்ளன; இன்றைய நாட்களின் வெளிச்சத்தோடு ஒப்பிட்டு பார்க்கும் பொழுதுகூட அவை துல்லியமாக உள்ளன. குறிப்பாக அவைகள் 100 ஆண்டுகளுக்கு முன்பு அவரால் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டவைகள். அவர் எழுதும் காலத்தில் சம்பவிக்காதவை. அவர் கர்த்தருக்குக் கீழ்ப்பட்ட எஜமானராக இருந்து வேதாகமத் தீர்க்கதரிசன கண் கொண்டு ஆராய்ந்ததன் மூலமாக மட்டுமே இதனைக் கவனித்தார். இவைகளில் சில சம்பவங்கள்: மகா உபத்திரவ காலம், முதலாம் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்கள், ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி, நிலப் பிரபுத்துவம் அரசாங்க முறைகளினால் மனித சமுதாயத்தின் நடத்தையானது ஒன்று சேர்ந்த அரசாங்கத்திலும், சபை, தேசம், பல்கலைக் கழகங்கள், பள்ளிகள் மற்றும் வீடுகளிலும் வீழ்ச்சி அடைந்தது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

இங்கு கூறப்பட்டுள்ள வேத பகுதி நம்முடைய நாளுக்குப் பொருந்தக் கூடியது. அசைவுள்ளவைகள் எல்லாம் நீக்கப்படுதல் நடந்து கொண்டு இருக்கிறது. தெய்வீக தராதரத்திற்கு இசைவும் இணக்கமுமாய் இருக்கக் கூடிய காரியங்கள் மட்டுமே அசைக்கப்பட முடியாதவைகள். அவைகள் நிலைத்திருக்கும். வானத்தை அசைத்தல் என்பது தற்பொழுதுள்ள மத அதிகாரங்கள் அழிக்கப்படுவதைக் குறிக்கிறது, அதாவது சபை மார்க்கம் அழிக்கப்படுவதைக் குறிக்கிறது. பூமியை அசையப் பண்ணுதல் என்பது தற்பொழுதுள்ள சமுதாயம் சம்பந்தமான நிதி மற்றும் அரசியல் சம்பந்தமான காரியங்களின் அழிவைக் குறிக்கும்.

## பங்குச்சந்தைப் பத்திரங்களும் உறுதிப் பத்திரங்களும் அசைக்கப்படப் போகின்றன

ஒவ்வொரு பொய்யானதும் போலியானதுமான அநீதியானதும் அசைக்கப்படும். நிதியைப் பற்றிய வார்த்தை ஜாலங்களில் எல்லாக் கையிருப்புப் பத்திரங்களிலிருந்தும் உறுதிப் பத்திரங்களிலிருந்தும் "தண்ணீர்" பிழிந்து கொட்டப்படும் என்று சொல்லப்படுவதுண்டு. ஒருமுறை அனுமதி கொடுக்கப்பட்டபின் கையிருப்புப் பத்திரங்களும் உறுதிப் பத்திரங்களும் சொத்தின் மதிப்பிற்கு மேலாக பல மடங்கு மேலாக வெளியிடப் படுகிறது என்று எங்கும் குற்றம் சுமத்தப்படுகிறது. இந்தக் கையிருப்புப் பத்திரங்களும் உறுதிப் பத்திரங்களும் மாறுப்பட்ட விலையினால் தற்பொழுது கொண்டுள்ள உரிமையாளர்களுக்கு ஒன்றுமில்லாதிருந்தும் அதற்குச் சமமாகக் கணக்கிட்டார்கள்: அந்தச் சொத்தின் மதிப்பின் விலை அத்துடன் சரியான வழியில் வியாபாரம் செய்வதற்காக சரியான விகிதத்தில் "நல்லெண்ண" விலையையும் கொடுக்கிறது. சாதாரண காலங்களில் இவை களின் சந்தை மதிப்பு, நம்பிக்கை மற்றும் வருங்கால முன்னேற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டப்படுகிறது. இப்பொழுது பொதுவாக மக்கள் உண்மையான சூழ்நிலையை அறிந்து கொண்டுள்ளனர், எந்த விலையிலும் அதைத் தொடுவதற்குப் பயப்படுகின்றனர். எவ்வளவு பெரிய கம் பெனிகள் நல்ல நிலையில் இயங்கினாலும் பங்குகள் திடமான நிலையில் இருந்தாலும் பங்குகளிலும் உறுதிப் பத்திரங்களிலும் பொது மக்கள் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள். இப்பொழுது புது யுகம் ஆரம்பிக்கும்பொழுது ஒவ்வொரு காரியமும் "**அசைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன**", இருப்புப் பத்திரங்களும் உறுதிப்பத்திரங்களும் அதன் மதிப்பில் அசைக்கப் பட்டுவிடும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். நேர்மையற்றதும் அநீதியுமானதுமாக இருக்கும் அனைத்தும் அசைக்கப்பட்டுத் தள்ளப்படுகிறது.

ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு முன்பு உலகின் பெரிய வங்கியாளர்களும் நிதி நிர்வாகிகளும் அவர்களுடைய நன்மைக்காக வெள்ளியைச் செல்லாததாக்க முடிவு எடுத்தனர். மேலும் தங்கத்தை திட்ட அளவாக்கி பரிமாற்றப் பொருளாக்கினர். கடைசியாக இது அவர்கள் எதை முன்னதாகக் காணவும் விரும்பவும் செய்தவர்களோ அதனை நிறைவேற்றியது. இது உலகத்தின் பண விநியோகத்தைக் குறைத்தது. வங்கியாளர்கள் உலகம் முழுவதும் இருந்த இந்த சூழ்நிலையை மிகவும் நன்றாகக் கட்டுப்படுத்த முடிந்தது. சுருக்கப்பட்ட வங்கியியல் அமைப்பு முறையில் சில வழிகளில் மிகவும் மதிப்புள்ளதாக இருந்தது, ஒவ்வொரு தங்க டாலரும் தன்னில் தானே ஐந்து அல்லது பத்து டாலர்களின் வேலையைச் செய்தது, காசோலைகளும் டிராஃப்டுகளும் அதற்கு உதவி செய்தன. பெரிய வங்கிகள் ஆச்சரியப் படத்தக்க விதமாக அதிகமான கழிவுகள் (டிஸ்கவுண்ட்) மற்றும் வட்டி பெறுவதின் காரணமாக - பொது மக்களின் செலவில் இலாபமடைந்து பணக்காரர்கள் ஆயின.

வெள்ளியைச் செல்லாததாக்கி தங்கத்தை மட்டும் ஒரே பரிமாற்றப் பொருளாக்குவதற்குப் பொது மக்கள் ஒப்புதல் அளித்தார்கள். ஆனால் திரித்துக் கூறப்பட்ட கதைகளால் அவர்கள் அப்படிச் செய்தார்கள். ஏனென்றால் ஜனங்களுக்கு இது உண்மையிலேயே சிறந்த காரியம் தானே தவிர ஜனங்களுடைய செலவில் வங்கியாளர்களுக்கு மாத்திரம் சிறந்த காரியம் அல்ல என்ற வங்கியாளர்களின் கதையை நம்பினார்கள். இது சொல்லுவதற்கு நன்றாக இருந்தாலும் பாதிக்கும் குறை வான வங்கியாளர்கள் மட்டுமே இந்தக் காரியத்தின் தத்துவத்தை அறிந்து கொண்டார்கள், மற்றவர்கள் பணம் படைத்தவர்களாகிய எல்லாவற்றையும் அறிந்தவர்களால் வழிநடத்தப்பட்டார்கள்.

இதனால் வங்கியாளர்களுக்கு பெரிய இலாபத்தையும் அதிகாரத்தையும் கொடுத்தது; ஏனென்றால் அவர்கள் இல்லாமல் பெரிய அளவிலான வியாபார பங்குப் பத்திரம் மற்றும் உறுதிப் பத்திரம் ஆகியவற்றின் வர்த்தகத்தை வெற்றிகரமாக நடத்த முடியாது. வங்கியாளர்கள் அதிகமான இருப்புப் பத்திரங்களையும்

உறுதிப் பத்திரங்களையும் வெளியிடுவதை மேற்கொண்டார்கள். இது உறுதி கூறுவதின் வழிமுறை என்று அறியப்படுகிறது. அவர்கள் உறுதிப் பத்திரங்களை நல்ல இலாபத்திற்கு விற்கக் கூடிய முகவர்களாக இருந்து, உறுதிப் பத்திரங்கள் மீது பணத்தை பொது மக்களிடம் கடனாகக் கொடுத்து அதை அவர்களிடம் விற்பதற்குக் காத்திருந்தார்கள்.

## சமன் செய்யப்படும் நாள்

"**அவர் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார்**" **(யோபு 5 : 13)** என்று வேதாகமம் சொல்லுவது நிறைவேறுவதை நாம் பார்க்கிறோம். இது எப்படி என்று நீங்கள் கேட்கலாம்? இதற்கு நான் பதிலளிக்கிறேன். பெரிய இலாபமடைவோம் என்று நம்பிக்கையுடன் பெரிய வங்கிகள் இந்த கையிருப்புப் பத்திரங்களையும், உறுதிப் பத்திரங்களையும் கொண்டு தங்கள் இரும்புப் பெட்டியை நிறைத்தார்கள். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் இதை எந்த விலைக்கும் விற்க முடியவில்லை. இவைகள் வங்கிகளுக்கு சொத்தாகக் கருதப்படுகிறது, இவைகள் மிகவும் பணக்காரர்களாக இருப்பதாகக் காட்டுகிறது; இப்பொழுது அவைகளிலிருந்து தண்ணீர் பிழிந்து எடுக்கப்பட வேண்டும். இவைகள் வங்கிகளின் ஆதாரத்தைப் பெருமளவில் சுருக்கிவிடும். அவைகளின் கையிருப்புப் பத்திரங் களின் சந்தை மதிப்பு விழுவதால், அவைகள் ஒரு பைசா கூட உண்மையிலேயே இழக்காமல் திடீரென ஏழையாகிவிடுவார்கள்.

இந்த உண்மையானது எல்லா வங்கிகளாலும் உணரப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் கணக்கிட்டு சமன் செய்யப்படும் நாள் வந்து விட்டால் அவர்களுடைய கையிருப்பு கள் – கையிருப்புப் பத்திரங்கள் – அதனுடைய உண்மையான மதிப்பில் கணக்கிடப்படும். அது அதிகமான சொத்துக்களுக்கு பதிலாக இருக்கும் என்பதைக் குறித்துக் காட்டுகிறது. அப்பொழுது சில பணக்கார வங்கிகள் திவாலாகி விடக்கூடும். அப்பொழுது அதை மூடுவதற்கோ அல்லது குறைவை நிறைவாக்குவதற்கோ அரசாங்கத்திடம் முறையிடுவார்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அக்காலத்தில் அது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். இவ்வாறே உலகத்திலுள்ள பணக்காரர்கள் எல்லாரும் பணத்தை முதலீடு செய்கிறார்கள், அதன் விளைவாக அனுகூலமற்ற நிலைமையில் உலகத்திலுள்ள பெரிய வர்த்தக நிறுவனங்கள் எல்லாவற்றையும் பாதிக்கிறது. வெள்ளியைச் செல்லாததாக்கியதன் மூலமாக வங்கியாளர்களுக்கு எல்லா விதத்திலும் ஆச்சரியம் படத்தக்கவிதமாக நன்மையாகவும் செல்வமடையவும் செய்தது, சமன் செய்யப்படும் நாள் முற்றிலும் விடிந்ததும் அதே மக்களைக் கொண்டு காரியங்களைச் செய்வது குறிப்பாகக் கடினமாக இருக்கும். உலகம் முழுவதும் இதனை எடுத்துக் காட்டும் வேலையில் ஈடுபடும். பணக்காரர்கள் பல விஷயங்களில் அழுத்தத்தை உணருவார்கள். அதை செயல் படுத்தும் காரியங்கள் முதலாம் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்களில் ஆரம்பமாயிற்று.

தி ஹார்ட் ஃபோர்ட் அண்டு நியூ ஹேவன் ரெயில் ரோட்ஃ, தி சிக்காகோ அண்டு ராக் ஐலண்டு மற்றவைகளும் கணக்கிற்காக (1907) அழைக்கப்பட்டன. சட்டத்தின் செயல்பாடான "தண் ணீரைப் பிழிதல்" என்ற செயல்பாடு மிகவும் பயமுறுத்தின. இவ்விதமாக முழுமையான "**அசைத்தல்**" சந்தேகத்திற்கிட மில்லாமல் நிறை வேறியது. ஆனால் இதற்கிடையில் யுத்தங்களானது சட்டம் மற்றும் சாதாரண வியாபாரத்தின் படிப்படியான வழிமுறைக்கும் காத்திராமல் உலக நிதி நெருக்கடியைக் கொண்டு வந்தது. ஐரோப்பிய தேசங்களும் அருகிலுள்ள கிழக்கு தேசங்களும் அசைக்கப்பட்டன. 1914–லிருந்து யுத்தங்கள் லட்சக் கணக்கான மனித உயிர்களையும் கோடிக் கணக்கான டாலர்களையும் முன்னமே இழக்கச் செய்துள்ளது. நிதி மதிப்பீடுகள் படிப்படியாகப் பெருமளவில் குறைவுபடத் தொடங்கியிருக்கின்றன. அதைப் போலவே தேசத்தின் வரவுகளும் குறைந்திருக்கின்றன. தேவையான ஒன்று இந்த தங்கமே. ஒவ்வொரு யுத்தத்திற்கும் தேவையான பொருள் இந்த தங்கம். இந்த அருமையான உலோகம் தற்பொழுது நடைமுறை யில் தேசங்களிலிருந்து மறைந்து கொண்டிருக்கிறது. உள் நாட்டிலுள்ள கையிருப்புப் பத்திரங்கள் விற்கப்பட முடியாத நிலை. கையிருப்புப் பத்திரங்களை விற்பதற்குப் பொதுவான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன – யார் அதை வாங்குவார்கள்?

அமெரிக்கப் பங்குகள் மற்றும் உறுதிப் பத்திரங்களின் பெருமளவு தொகை அந்நிய தேசத்தவர் கையில் இருப்பதை நாம் அறிகிறோம். அமெரிக்க சந்தையின் வீழ்ச்சி காரணமாக அமெரிக்க வங்கியாளர்களின் எண்ணங்களில் திகிலடைந்திருப்பதற்காக ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இராட்சத நிதி முதலீட்டு நிறுவனங்கள் நிதிச் சிக்கலில் உள்ளன (2011) லெஹ்மேன் பிரதர்ஸ் என்ற நிதிநிறுவனம் திவாலாகி விட்டது; AIG மற்றும் பேர்ஃ ஸ்டீயர்ன்ஸ் பெருமளவு மாற்றத்திற்கு உட்பட்டுக் கொண்டிருக் கின்றன. தேசம் முழுவதிலுமுள்ள 150,000 காப்பகங்கள் மூடப்பட்டன. மியானிஸ் ஸோட்டா மாகாண அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டது, நூற்றுக் கணக்கானோர் தற்காலிகமாக தங்களது வேலைகளை இழந்தனர், மாகாண அரசு ஊழியர்கள் மாகாண சட்டசபை முன்பு அணிவகுப்பு நடத்தினார்கள்.

வங்கிகளின் வீழ்ச்சி சரிசெய்யப்பட்டுவிட்டது என பலர் கருதுகிறார்கள், அவர்கள் கருத்து தவறானதாகும். யூ. எஸ். மற்றும் ஐரோப்பிய வங்கிகளின் முதலீட்டாளர்கள் பல வருடங்களாக மூன்றாவதாக பெரிய சிக்கலிலிருந்து விடுவிக்கப்படுதலின் நடுவில் நாம் இருக்கிறோம் என்பதை நீங்கள் கவனிக்காமல் இருந்திருக் கலாம். உண்மையான நிதி மீட்பின் வேலை லெஹ்ஃமேன் பிரதர்ஸ் 2008–ல் நொறுங்கிய பின்னர் வந்தது, அது வங்கியின் நஷ்டங்களாகிய 3.7 டிரில்லியன் டாலர்களை மாற்றிக் கொடுத்துள்ளது, சொத்துக்களின் பிரச்சனை யு. எஸ்ஸின் வரி செலுத்துவோருக்கு மட்டுமே. அதன் ஐரோப்பிய யூனியன் அதனுடைய பலவீனமான அங்கத்தினர்களால் 750 ஈரோ பில்லியன் கடன் தொகை வந்தது – குறிப்பாக ஐரோப்பிய வங்கிகளை ஸ்திரப்படுத்துவதற்காக 2 டிரில்லியன் டாலர் உறுதிப் பத்திரங்கள், வங்கிகள் ரியல் – எஸ்டேட் பிரிவுகளில் ஐரோப்பாவைக் குலுக்கிய பொருளாதாரத் திற்காக கிரீஸ், அயர் லாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின் மற்றும் பெல்ஜியத்திற்காக ஊற்றப்பட்டது. இது ஜுலை 2011–ம் உலகப் பொருளாதாரத்தின் ஓர் மேலோட்டமான ஒரு பகுதி மட்டுமே.

## வெள்ளியைச் செல்லாததாக்கியதன் விளைவுகள்

சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்ப்போம்: இந்தக் காரியங்களைப் பார்த்தால் அமெரிக்க வங்கியாளர்கள் பங்கு மாற்ற சந்தை வியாபாரத்திற்கு அஞ்சுவதில் ஏதாவது ஆச்சரியம் இருக்கிறதா? அவற்றை மூடுவதால் கையிருப்பு பத்திரம் மற்றும் உறுதிப் பத்திரங்களின் உரிமையாளர்கள் அவற்றிலிருந்து இலாபமடைவது தடுக்கப்பட்டதை உணர்ந்தார்கள்; இந்தக் கையிருப்புப் பத்திரங்களின் மற்றும் உறுதிப் பத்திரங்களின் முக மதிப்பு பாதுகாக்கப்பட்டது, அதன் மூலம் வங்கிகளும் வங்கியாளர்களும் தொடர்ந்து பங்குகளையும் உறுதிப் பத்திரங் களையும் கணக்கிட்டு விலையாகக் கருதினார்கள். அதற்கு விலை செலுத்துவதற்கு இன்று யாரும் இல்லை.

வெள்ளியானது செலவாணியில் செல்லாததாக்கப் படாதிருந்தால் பணச் சந்தையைப் பொறுத்த வரை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் அதிகமான வட்டி விகிதத்தையும்

ஊக்கத் தொகையையும் எளிதான நேரத்தில் பெற்றிருக்க முடியாது. ஆனாலும் அவர்கள் தற்பொழுது இருக்கும் துன்பத்தில் இருக்க முடியாது, ஏனென்றால் உலகத்தில் வியாபாரம் செய்வதற்கு இப்பொழுது இருக்கும் பணத்தைப் போல இரண்டு மடங்கு பணத்தைக் கொண்டிருக்கும். உலகத்திலுள்ள தங்க நாணயங் களைக் கணக்கிற் கொள்ளுவோமானால் கடன்களுக்கு செலுத்தும் வட்டிக்குப் போதுமானதாக இராது, வங்கி நிறுவனங்கள் உவமையாக எப்படி ஜனங்களின் தொண்டையை நெறித்ததோ அப்படியே இப்பொழுது அவைகள் தங்களுடைய சொந்த ஏற்பாடுகளின் மூலமாகத் தங்களையே நெறித்தன.

கடன்களுக்கு மீதான வட்டி தங்கமாக செலுத்தப்பட முடியாது. ஏனென்றால் வட்டியைச் செலுத்துவதற்கு தங்கம் போதுமானதாக இல்லை. ஆகவே செய்வதற்கு மீதமுள்ள ஒரே காரியம் அதிகமான உறுதிப் பத்திரங்களைக் கொடுப்பதே ஆகும். அதுவே திரும்பக் கொடுக்கப்படும் என்றும் வட்டி தங்கமாகச் செலுத்தப்படும் என்றும் வெளியிடப்பட்டது. இப்பொழுது யாரும் கடன் பத்திரங்களை வாங்குவது இல்லை, என்ன செய்யப் போகிறார்கள்? யுத்தங்கள் மூலமாக ஒரு கடைசியான முடிவுக்கு வந்துவிட்டதை நாம் அறிய முடிகிறது; கடந்த காலங்களில் வங்கியாளர்களுக்கு சாதகமாக செயல்பட்டு வந்த நிதிச் சக்கரம் எதிர்த்திசையில் சுழல ஆரம்பித்துவிட்டது. அது அவர்களை நிதி சம்பந்தமாக காயப்படுத்திக் கொண்டிருக்கிறது.

நம்முடைய நிதியின் (பொருளாதாரத்தின்) "சீட்டுக்கட்டு வீடு" தள்ளாடிக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய விழப் போகின்றது. அரசாங்கங் களாலும் உலகின் தலை சிறந்த நிதியாளர்களாலும் முன்னேற்றத்திற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய திறமையான முடிவுகளால் அவர்கள் விருப்பப்பட்டது நிறைவேறும் என நாங்கள் நம்புகிறோம். தற்பொழுதுள்ள நிதி நிறுவனங்களை "***அசைத்து***" நொறுக்கு வதிலிருந்து காப்பாற்றுவார்கள் என நாம் நம்புகிறோம். ஆகவே நாம் வேதாகமத்தை சரியாக புரிந்து கொண்டிருந்தோமானால் கணக்குத் தீர்க்கும் மகா நாள் வந்திருக்குமானால் அசைக்கக் கூடாதவை தவிர அதில் அசையக் கூடிய பொருட்களெல்லாம் ஒன்றும் மீதமில்லாமல் அசைக்கப்படும்; அதன் பிறகு எல்லா மனித முயற்சிகளும் தோல்வியடையும் என்பது நிச்சயம். நொறுக்கப் படுதலில் மிகவும் பெரியதும் இதுவரை எந்த விதத்திலும் ஒருபொழுதும் சம்பவியாததுமான நிதி நெருக்கடி பிரச்சனை சம்பவிக்கும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை. நான் இப்பொழுது சொல்லியவைகள் பலரால் சொல்லப்பட்டவைகளிலும் செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்ட வைகளிலும் குறைந்தபட்ச அளவிலான ஒரு சிறு பகுதி தான் என்பதை கவனிக்க வேண்டும். நான் இவைகளை வெறுமனே ஒருங்கிணைத்து மாத்திரமே கொடுக்கிறேன். இந்தக் காரியங்கள் வேதாகமத்திலுள்ள சாட்சிகளுடன் அவைகளுக்கு உள்ள தொடர்பைக் காட்டுகிறது, நாம் இப்பொழுது "***அசைத்தலின்***" மகா நாளில் இருக்கிறோம் என வேதாகமம் சாட்சியிடுகிறது. ஒரு சிலர் இதை மதவாதப் பிற்போக்குத் தன்மை என்று கருதக்கூடும். ஏனென்றால் பெரும்பான்மையானோர் வேதத்தின்மீது முற்றிலும் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள். அத்துடன் மட்டுமல்லாது வருங்காலத்தில் இந்தக் காரியங்கள் சம்பவிக்கும்பொழுது உண்மையான நிலைமையை அறிந்து கொள்வதினால் சிலர் உதவி பெறக்கூடும். தேசங்கள் மீது "***அசைத்தல்***" உண்டாயிற்று என்ற உண்மையை ஒப்புக் கொண்டு – நிதி, சமுதாய, அரசியல் மற்றும் மதம் போன்றவைகளில் இந்த அசைத்தல் தற்செயலாக நிகழவில்லை; அது கர்த்தரால் உண்டாயிற்று என்பதைப் புரிந்து கொள்ளக்கூடும்.

தங்கம் மாற்றுச் செலவாணியாக உள்ளது, அந்தத் தங்கம் பற்றாக்குறையாக இருப்பதால் முழு உலகத்தின் வர்த்தகமும் தேக்கமடைந்துள்ளது. உலகத்தின் அவசியங் களும், தேவைகளும் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது, அவற்றைத் தங்கத்தைக் கொண்டு வாங்க முடியாது. வெள்ளியைச் செல்லாததாக்கியது எசேக்கியேல் தீர்க்கதரிசியினால் குறிப்பிடப் பட்டுள்ளது. **(எசே. 7 : 19)** "***தங்களது வெள்ளியைத் தெருக்களில் எறிந்து விடுவார்கள்***" அதைப் பணமாகக் கருதாமல் பொருளாகக் கருதுவார்கள். தீர்க்கதரிசி தங்கமானது எவ்வாறு அரிதான பொருளாகிக் கடைசியில் மக்களால் அது விலக்கப்படும், இருந்த போதிலும் அது ஒரு சுத்தமில்லாத பொருளாகக் கருதப்படும் என்று கூறுகிறார். எபிரேய வேதாகமம் இவ்விதமாக "**அவர்களுடைய பொன் வேண்டா வெறுப்பாயிருக்கும்**" என்று உறுதியாகக் கூறுகிறது. வெள்ளியும் பொன்னும் இனி கிடைக்காது.

பாதுகாப்புப் பத்திரங்களை வைத்திருக்கும் பெரிய கார்பரேஷன்களை நிர்வாகிப்பவர்களும் வங்கியாளர்களும் பெரிய கடனுக்கான வட்டிக்காகவும் உறுதிப் பத்திரத்தின் தொகைக்காகவும் தொகையை சரி செய்வது கடினமான காரியம் ஆகும்போது, எவ்வளவு ஸ்திரமாக நன்கு நிர்வகிக்கப்படும் கம்பெனியாக இருந்தாலும் முதிர்வடைந்த உறுதிப் பத்திரங் களுக்கு பதிலாக அதை சரி செய்வதற்காக புதிய உறுதிப் பத்திரங்களை வெளியிட முடியாது என்று அறிந்து கொண்டுள்ளனர். இந்த பூமியின் நிதி மற்றும் அரசியல் அதிபர்களின் எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கும்பொழுது மிகுந்த போராட்டம் இருப்பதில் ஆச்சரியம் அல்லவே. அவர்கள் மிகவும் சரியான காரணத்திற்காக பயப்படுவது தற்காலத்திற்கான ஒரு அடையாளமாக நம்முடைய கர்த்தரால் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டுள்ளது. "**வானத்து சத்துவங்களாகிய** சபை அமைப்புகள் **அசைக்கப்படும்; ஆதலால் பூமியின் மேல்** – சமுதாய ஒழுங்கின்மேல் – **வரும் ஆபத்துகளுக்கு பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்து போம்.**" **(லூக். 21 : 26).** ***

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**